NAFEERA RAZEED

# கிரகித்தல்

(நிருவாகமட்ட சகல போட்டிப் பரீட்சைகளுக்குமுரியது)

உள்ளே:

- ★ அறிவுத்திறன்:
- ★ கிரகித்தல் என்றால் என்ன?
- ★ உண்மைக் கருத்தை கிரகித்தல்
- ★ விளக்கக் கிரகித்தல்.
- ★ சுருக்கக் கிரகித்தல்
- ★ கிரகிக்கும் உண்மைக் கூற்றுக்களும், மாற்றுக் கூற்றுக்களும்
- ★ தொகுத்துக் கிரகித்தல்
- ★ வினாக்கிரகித்தல்.
- ★ மாதிரி வினாக்களும், விடைகளும்


*ஆசிரியர்:*

S. L. அப்துல் கரீம், B. A. (Geog), S. L. PL. S.

*(உதவிப் பணிப்பாளர், திட்டமிடல்)*

பிரதான வீதி,
நற்பிட்டிமுனை - 02,
கல்முனை.


விலை ரூபா:


நியு நெஷனல் - சாய்ந்தமருது.

என்னுரை :
------

உயர் மட்டப் பரீட்சைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள " கிரகித்தல் " பாடமெனின் அது எமது தாய் மொழி தானே என எம்மில்பெரும்பாலானோர் எண்ணி விடுகிறோம். மொழி ஆற்றல், சொல்வளம். இருந்தால் பரீட்சையில் சித்தியடைந்து விடலாம் என நம்பி விடுகிறோம். அதனால், இப்பாடம் சம்பந்தமாக எவ்வித பயிற்சியும் செய்யாமல் பரீட்சைக்குத் தோற்றியும் விடுகின்றோம். ஆனால், நடப்பது என்னவோ நாம் எதிர் பார்த்திருந்த பரீட்சைப் பெறுபேறு எமக்குக் கிடைப்பதில்லை. ஏமாற்றமடைகின்றோம். ஏன் இந்த ஏமாற்றம்?

கிரகித்தல் என்பது பார்த்த, கேட்ட, வாசித்த ஒரு விடயத்தை சரியாக விளங்கிக் கொள்வதாகும். கிரகிப்புத் திறன் இதிலிருந்து வேறுபடுகின்றது. பார்த்த, கேட்டு, வாசித்து விளங்கிக் கொண்ட விடயமொன்றினைத் தனக்குள்ள பொது அறிவு, நுண்ணறிவு, மதி நுட்பம் என்பனவற்றைக் கொண்டு ஆய்ந்தறிந்து அதில் திறன் பெற்றுக் கொள்வதாகும். இக்கிரகித்தல் திறனை வளர்த்துக் கொண்டால் பரீட்சையில் இலகுவாகச் சித்தியடைந்து கொள்ள முடியும். இந்த வகையில் கிரகிப்புத் திறன் என்ற அம்சங்களை இந்நூலைப்படிக்கும் ஒவ்வொருவருக்கும் விளங்கிக் கொள்ள வைப்பதில் ஒரு சிட்டுக் குருவியின் முயற்சியே இந்நூலை ஆக்கியதன் நோக்கமாகும்.

சமகாலத்தில் நிருவாக மட்ட உயர் தொழில்களை எதிர்பார்த்து நிற்கும் பட்டதாரிகள், ஆசிரியப் பெருமக்கள் தங்களால் முடிந்தளவிற்காவது எழுதும்படி கூறி என்னை உற்சாக மூட்டியவர்கள் பலர். அன்னாரின் வேண்டுதலை நிறைவேற்றும் வகையில் பல வேலைப்பழுக் களுக்கும் மத்தியில் பல்துறைப் பரீட்சைகளுக்குமாக வெளிவந்த கிரகித்தல் வினாப்பத்திரங்களை ஆதாரமாகக் கொண்டு இந்நூலை ஆக்கியுள்ளேன்.

பல்துறைசார் பரீட்சார்த்திகளின் நன்மை கருதி இலங்கை நிருவாக சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கைக் கல்வி நிருவாக சேவை, இலங்கை [illegible] சேவை பரீட்சைகளுக்காக கடந்த காலங்களில் நடந்த பரீட்சை வினாத்தாள்களை உதாரணமாகக் கொண்டு இந்நூலை எழுதியுள்ளேன். அத்துடன் இந்நூலில் மேற்படி ஒவ்வொரு பரீட்சைக்குமான மாதிரி வினா விடைகளும் கடைசியில் சுருக்கமெழுதுதல் பற்றிய விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளன.

இச்சிறு நூலைப் பயன்படுத்தி சகல பரீட்சைப் பிரிவினரும்தமது இலக்கை அடைந்து கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

எஸ்.எல்.அப்துல் கரீம்.

பிரதான வீதி,
நற்பிட்டிமுனை-02.
கல்முனை.
1994.10.26 ந் திகதி.

## பொருளடக்கம்:


| விடயம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | அறிவுத்திறன் | 01 |
| 2. | கிரகித்தல் என்றால் என்ன? | 02 |
| 3. | உண்மைக் கருத்தைக் கிரகித்தல். | 03 |
| 4. | விளக்கக் கிரகித்தல். | 05 |
| 5. | சுருக்கக் கிரகித்தல். | 06 |
| 6 | கிரகிக்கும் உண்மைக் கூற்றுக்களும் மாற்றுக் கூற்றுக்களும். | 08 |
| 7. | தொகுத்துக் கிரகித்தல். | 10 |
| 8. | வினாக்கிரகித்தல். | 13 |
| 9. | மாதிரி வினாத்தாள் -1 | 15 |
| 10. | மாதிரி வினாத்தாள் -2 | 18 |
| 11. | மாதிரி வினாத்தாள் -3 | 19 |
| 12. | மாதிரி வினாத்தாள் -4 | 20 |
| 13. | விடைகள் | 22 |
| 14. | சுருக்கமெழுதல். | 28 |

## கிரகித்தல்
## COMPREHENSION .

அறிவுத்திறன் :

கிரகித்தலானது அறிவுத்திறனின் பாற்படும். ஒருவரின் கல்வியறிவிற்கும் அறிவுத்திறனுக்குமிடையில் வேறுபாடுண்டு. கல்வியறிவினை ஆசிரியர்கள், பெற்றோர் நூல்கள், சஞ்சிகைகள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். அறிவுத்திறன் அவ்வாறு பெறத்தக்கதன்று. அறிவுத் திறனானது தான் பெற்றுக் கொண்டகல்வியறிவுடன் தனக்குள்ள பகுத்தறிவு (பகுத்து ஆயும் அறிவு) ஆற்றல், சிந்தனைத் திறன், ஆக்கற் செயற்பாடுகள், நுண்ணறிவு, மதி நுட்பம், ஆளுமை என்பவற்றின் துணையுடன் பெறப் படும் ஒன்றாகும். எனவே, ஒருவரின் அறிவுத் திறனைக் கண்டறிவதற்கும், அதனை மதிப்பிட்டுக் கொள்வதற்கும் அவரின் கிரகித்தல் திறனை அளவிடுதல் மிக அவசியமாகின்றது.

ஒருவரின் அறிவுத்திறனை பின்வரும் அம்சங்களைப் பரீட்சித்து அளந்து மதிப் பிட்டுக் கொள்ளலாம்.

(1) பொது அறிவு.
(2) நுண்ணறிவாற்றல்.
(3) விவேக ஆற்றல்.
(4) தர்க்கித்து முடிபு காணும் ஆற்றல்.
(5) கிரகிக்கும் ஆற்றல்.

என்பனவாகும். இவற்றில் பின் சொல்லப்பட்ட நான்கும் ஒருவர் தன் னகத்தே கொண்டுள்ள ஆற்றல்களாகும்.

பொது அறிவு :

இது கல்வி அறிவினால் பெற்றுக் கொள்ளப்படும் ஒன்றாகும். உள்நாட்டு வெளி உலக சூழலில் காணப்படும் அம்சங்கள் பற்றி அறிந்திருப்பதைக் குறிக்கும். உலகிலுள்ள சகல இயற்கை அம்சங்கள், வரலாற்று நிகழ்வுகள், நடந்த நடக் கின்ற அரசியற் பொருளாதார நிகழ்வுகள் விஞ்ஞானம்- பற்றிய பொது அம்சங்கள் போன்றவை இதில் அடங்கும்.

நுண்ணறிவாற்றல் :

ஒரு விடயத்தை அல்லது கொடுக்கப்படும் பிரச்சனையொன்றினை அவதா னித்து காரணங்கள் கொண்டு ஆழமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் ஆற்றலை நுண்ண றிவெனப்படும். இதற்கு ஒருவர் பெற்றுக் கொண்ட உலகளாவிய பொது அறிவு மிகப்பயனுடையதாகவமையும்.

விவேக ஆற்றல் :

இதனை மதிநுட்பம் எனவும் வழங்கப்படும். மதியெனின் புத்தியாகும். விவேகம் என்பது ஒருவரிடம் இயற்கையாகவே பொதிந்துள்ள ஒரு விடயத்தின் நுட் பத்தைக் கண்டறியும் ஆற்றலாகும். எனவே, விவேகம் நுண்ணறிவிலும் வேறுபட்ட வொன்றாகும். ஒருவர் எதிர் பாராது ஏற்படும் சங்கடத்தில் நின்றும் தப்பித் கொள்வதும், புதிரான வினாக்களுக்கு புத்தியைக் கொண்டு விடையளிப்பதும் அவரின் விவேகத்தின் காரணமாகவேயாகும்.

தர்க்கித்தல்:

தரப்படும் தகவல்களில் இருந்து தர்க்க ரீதியாக ஆராய்ந்து நியாயம் காணுதலையே தர்க்கித்தல் திறன் எனப்படும். தரப்படும் நியாயங்கள் உண்மையானதாகவும் இருக்கலாம், அல்லது உண்மைக்குப் புறம்பானதாகவும் இருக்கலாம். அவற்றில் சரியானது எதுவென்பதை நாம் கொண்டுள்ள பொது அறிவு நுண்ணறிவு, விவேகம் என்பவற்றின் துணையுடன் வாதப்பிரதிவாதம் செய்து முடிவெடுத்தலையே இது குறிக்கும்.

## கிரகித்தல்.

கிரகித்தல் என்றால் என்ன?

நாம் தினமும் நூல்களையும், பத்திரிகைகளையும் வாசிக்கின்றோம். வானொலியைக் கேட்கிறோம். தொலைக்காட்சியில் வரும் நிகழ்ச்சிகளைக் கண்டும், கேட்டும் களிப்படைகின்றோம். சொற்பொழிவுகளையும், உரையாடல்களையும் அவதானிக்கிறோம். முதலில் அவற்றை என்னவென்று விளங்கிக் கொள்கின்றோம். இவ்விளங்கிக் கொள்ளல் என்பது புத்தி பூர்வமாக நடைபெறும் ஒரு நிகழ்வாகும். சில வேளைகளில் நாம் கேட்பனவற்றையும், காண்பனவற்றையும் இலகுவில் புரிந்து கொள்ள முடிவதில்லை. அப்பொழுது எமக்குள்ள அறிவைப் பயன்படுத்தி விளங்கிக் கொள்கின்றோம். இவ்வாறு ஒரு விடயத்தினைத் தெளிவாக விளங்கிக் கொள்வது கல்வியினால் அடையக் கூடியவொரு பயனாகும். நாம் கேட்பனவற்றிலிருந்தும், வாசிப்பனவற்றிலிருந்தும், காண்பனவற்றிலிருந்தும் உண்மையான கருத்தை ஐயந்திரிபுற விளங்கிப் புரிந்து கொள்ளுதலையே கிரகித்தல் எனப்படும். இன்னொரு வகையிற் கூறின் வாசகம் ஒன்றினைப் படிக்கும் போதும் அவ்வாசகம் அல்லது காட்சி அல்லது உரை கொண்டுள்ள பிரதான விடயம் என்ன? அல்லது பிரதான கருத்தென்ன? என்பதை விளங்கிக் கொள்ளுதலே கிரகித்தலாகும். அவ்வாறு கிரகித்து விளங்கிக் கொள்ளும் ஆற்றலை கிரகிப்புத் திற' எனப்படும்.

கிரகித்தலின் போது பிரதான கருத்தை மாத்திரமே மனதில் எடுத்துக் கொள்கிறோம். பிரதான கருத்தானது எழுதிய பேசிய, ஒருவரின், எண்ணக் கருத்தினைக் குறிக்கும். கிரகித்தல் மூலம் நன்கு விளங்கிக் கொண்ட பிரதான கருத்தே நீண்ட காலத்திற்கு எமது அடி மனதில் ஞாபக சக்தியாக இருக்கின்றது.

கிரகித்தலின் வகைகள்:

(1) உண்மைக்கருத்தைக் கிரகித்தல்.
(2) விளங்கக் கிரகித்தல்.
(3) சுருங்கக் கிரகித்தல்.
(4) கிரகிக்கும் உண்மைக் கூற்றுகளும் மாற்றுக் கூற்றுகளும்.
(5) தொகுத்துக் கிரகித்தல்.
(6) வினாக் கிரகித்தல்.

## (1) உண்மைக் கருத்தைக் கிரகித்தல்

கொடுக்கப்படும் வாசகப் பகுதியொன்றில் உண்மையில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் இருக்க முடியாது. அதாவது, பிரதான கருத்தாகப் பல இருக்க முடியாது. ஆதலால் குறித்த வாசகப்பகுதி சொல்லும் பிரதான கருத்தை விளங்கிக் கொள்வதைத்தான் உண்மைக் கருத்தைக் கிரகித்தல் எனப்படும். இதனைப் பின்வரும் உதாரணத்தின் மூலம் தெளிவாக்கிக் கொள்ளலாம்.

இரு நண்பர்கள் பத்திரிகையொன்றில் காணப்பட்ட கட்டுரையொன்றில் பின்வரும் வாசகப்பகுதியை வாசிக்கிறார்கள்.

" ஐம்பதுகளின் பின் உலக நாடுகளுக்கிடையில் காலத்திற்குக் காலம் மண்ணாசை, புகழாசை, போர் வீரியம் போன்ற காரணங்களால்உக்கிரமமான போர்கள் நிகழ்ந்து கொண்டு வருகின்ற போதும் இது காலவரையும் மீண்டும் ஒரு உலக யுத்தம் ஏற்படவில்லை. சர்வதேச நாடுகளுக்கிடையே அணு சம்பந்தமாக மறைமுகமாக நாடுகள் சார்ந்து ஏற்பட்டுள்ள பயமே காரணமாகும் எனக் கூறப்படுகின்றது. இப்பயம் இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பான் நாட்டின் உறிரோசிமா, நாகசாகி எனும் இடங்களில் போடப்பட்ட அணுக்குண்டுகள் செய்த பேரழிவினால் ஏற்பட்டதாகவிருக்கும் எனவும் கருதப்படுகின்றது."

இப்பகுதியைப் படித்த முதலாமவர் " இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஏற்பட்ட பேரழிவினைக் கண்டு பயந்து தான் இன்று மூன்றாம் உலக யுத்தமொன்று ஏற்படாமல் இருக்கிறது " எனவும்,

இரண்மாமவர், " அணு யுத்தமானது பெரும் அழிவை ஏற்படுத்துமாதலால் தான் மூன்றாம் உலக யுத்தம் ஏற்படாதுள்ளதெனவும்" வாதிட்டுக் கொள்கிறார்கள்.

இவர்கள் இருவரும் வாதம் புரிவதைக் கண்ணுற்ற மூன்றாமவர் ஒருவர் அக்கட்டுரையின் குறித்த வாசகப்பகுதியைப் படித்து விட்டு " அணு சம்பந்தமாக நாடுகளுக்கிடையே மறைமுகமாக ஏற்பட்டுள்ள பயம் தான் மூன்றாம் உலக யுத்தமொன்று ஏற்படாமல் தடுக்கிறது ". எனக் கூறினார்.

இம்மூவரிலும் யார் கூறிய கருத்து இவ்வாசகப்பகுதியிலுள்ள உண்மைக் கருத்தைக் குறிக்கின்றதென்பதே எமக்குள்ள கேள்வியாகும். இவ்வினாவிற்கு விடை காண பின்வரும் அம்சங்களை வைத்து நோக்குதல் வேண்டும்.

1:1. வாசிக்கும் பகுதி எதைப்பற்றிக் கூறுகிறது?
1:2. அவ்வாசகத்தை எழுதியவரின் நோக்கமென்ன?
1:3. எழுதியவர் எடுத்துக் கொண்ட பொருளைப்பற்றி எவற்றைக் கூறுகிறார்?
: .

என்பனவற்றை ஐயம் திரிபுற விளங்கிக் கொண்டால் உண்மைக் கிரகித்தலைப் புரிந்து கொள்வது இலகுவாகி விடும்.

1:1. வாசிக்கும் பகுதி சுட்டுவது என்ன?

மேற் சொல்லப்பட்ட பந்தியில் எதைப் பற்றிக் கூறப்படுகின்றது?. இதற்கு விடையாக,

* ஒருவர் " நாடுகளுக்கிடையிலான போர் பற்றி " என்றும்,
* இன்னுமொருவர் " மூன்றாம் உலக மகாயுத்தம் பற்றி" என்றும்,
* வேறொருவர் " அணுவின் அழிவு பற்றி " என்றும்,
* மற்றுமொருவர், " அணுவினால் ஏற்பட்டுள்ள பயம் பற்றி " என்றும், கூறுவர்.

ஆனால், மேற்சொல்லப்பட்ட நான்கு கருத்துக்களும் வாசகப்பகுதியில் கூறப்பட்டிருந்த போதும் அங்கு காணப்படும் பிரதான விடையம் " மூன்றாம் உலக யுத்தம் " பற்றிய கருத்தாகும்.

1:2 ஆசிரியரின் நோக்கமென்ன?

இவ்வாசகப் பகுதியை அமைத்த ஆசிரியர் உண்மையில் மூன்றாம் உலக யுத்தம் பற்றிச் சொல்லியது என்ன நோக்கத்தினை வைத்துக் கொண்டு, எதனைச் சுட்டிக்காட்டுகிறார்? என்பதே நாம் அறிந்து கொள்ள வேண்டிய அடுத்த முக்கிய விடயமாகும்: இங்கு ஆசிரியரின் நோக்கம் "உலக யுத்தம்-ஒன்று இதுகாலவரை ஏற்படவில்லை." எனக் கூறி மறைமுகமாக" உலக யுத்தம் ஏற்படாது" என எடுத்துக் கூறுவதேயாகும்.

1:3 ஆசிரியரின் கூற்று:

ஆசிரியர், உலக யுத்தம் ஏற்படாது என என்ன ஆதாரத்தினை வைத்துக் கொண்டு கூறுகிறார். அல்லது காரணம் சொல்கிறார் என்பதே அடுத்த முக்கிய அம்சமாகும். அணுவினால் ஏற்பட்டுள்ள பயங்கர அழிவின் காரணமாக அணு மீது உலக நாடுகளுக்குப் பயம் உண்டு. அதுவும், உலக வல்லரசுகள் தமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக அணுவை மறைமுகமாகக் கைக்கொண்டு வருகின்றன. ஒரு நாட்டில் அணுபற்றி நடைபெறுவது இன்னொரு நாட்டுக்குத் தெரியாது. எனவே, நாடுகளுக்கிடையே அணு சம்பந்தமாக மறைமுகமான பயம் ஒன்று ஏற்பட்டுள்ளது. " இம்மறை முகமான பயத்தினால் மூன்றாம் உலக யுத்தம் ஏற்படவில்லை" என தான் எடுத்துக் கொண்ட பொருள் பற்றிக் கூறுகிறார்.

உண்மைக்கிரகிப்பு:

மேற்கூறப்பட்ட மூன்று அம்சங்களில் இருந்தும் நாம் கிரகித்துக் கொள்வது எதனை? இங்கு இரண்டு விடயங்கள் கவனத்தில் கொள்ளத் தக்கதாகும்.

(1) மூன்றாம் உலக யுத்தம் ஏற்படவில்லை.

(2) அணுவின் பேரில் உள்ள மறைமுகமான பயம்.

எனவே, இவற்றிலிருந்து நாம் கிரகித்துக் கொள்ளும் உண்மைப் பொருள் " அணுவின் மீதுள்ள பயத்தினால் உலக யுத்தம் ஒன்று ஏற்படவில்லை." என்பதாகும்.

பொதுப் பரீட்சை வினா

பொதுப் பரீட்சையில் பொது மெய்க்கிரகித்தல் சம்பந்தமான வினா இவ்வாறு கேட்கப்படும்.

* கொடுக்கப்பட்டுள்ள வாசகப்பகுதியில் இடம் பெறும் பிரதான கருத்தை இயன்றவு சுருக்கமாக ஒரு வாக்கியத்திற் தருக.

இவ்வினா அமைப்பில் இரு கேள்விகள் உள. ஒன்று இயன்றளவு சுருக்கமாக எழுதுக. மற்றயது, ஒரு வாக்கியத்தில் எழுதுக. சுருக்கமாக எழுதும் போது வழமையாக நாம் சுருக்கமெழுதும் முறையைப் பின் பற்றலாகாது. இங்கு சுருக்கமென்பது பிரதான கருத்தையே குறிக்கும்.

வாக்கியமென்பது, எழுவாயும் முற்றுப் பயனிலையும், அல்லது எழுவாயும் செயற்படுபொருளும் முற்றும் பயனிலையும் கொண்டவொரு தொடராகும். சில வேளை எழுவாயும் எச்சப் பயனிலையும் கொண்ட ஒரு தொடரில், எச்சப்பயனிலை ஒரு முற்றுப் பயனிலை கொண்டு முடிந்தால் அவ்வமைப்பும் ஒரு வாக்கியமாகும். மேலும் வாக்கியம் பொருள் செறிவு நிறைந்ததாகவும், தலைமைக் கருத்தைக் கொண்டதாகவும், சுருக்கமானதாகவும் அமையும். இதற்கிணங்க முன் சொல்லப்பட்ட வாசகப்பகுதியின் பிரதான கருத்து இயன்றளவு சுருக்கமாகவும், ஒரு வாக்கியமாகவும் அமைக்கும் போது அது,

* " அணுமீதுள்ள பயத்தினால் மூன்றாம் உலக யுத்தம் ஒன்று ஏற்படவில்லை" என அமையும். இவ்வாக்கியம் 7 முதல் 11 வரையான சொற்களைக் கொண்டதாக அமையலாம்.

## 2. விளக்கக் கிரகித்தல்

நாம் வாசிப்பனவற்றை கேட்பனவற்றை காண்பனவற்றை அவதானித்து எமக்குள்ள அறிவுத் திறனைக் கொண்டு புத்தி பூர்வமாக நுணுகி ஆராய்ந்து விளங்கிக் கொள்கிறோம். எனினும் நாம் கேட்பனவற்றையும், வாசிப்பனவற்றையும் ஐயம் திரிபற விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் பேசிய நடை, எழுதப்பட்டுள்ள நடை, என்பனவற்றிலுள்ள கடினமான சொற்களையும் சொற்றொடர்களையும் கருத்தமைவுடையதாக பிரித்தறிந்து கொண்டால், பேசியதன் எழுதியதன் பொருளை விளங்கிக் குறித்த வாசிக்கப்பட்ட பகுதியுடன் தொடர்பு படுத்தி இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

தரப்பட்ட பந்தியின் அல்லது மூலப்பகுதியின் விபரங்களை அறியும் போது அப்பகுதியை வாக்கியம் வாக்கியமாகப் படித்து கருத்தை விளங்கிக் கொள்ளல் வேண்டும். மயக்கமாக அல்லது விளக்கமற்றிருக்கும் சொற்களையும், சொற்றொடர்களையும் தெளிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

- விளக்கக் கிரகித்தல் பயிற்சியின் முக்கிய நோக்கம் வாசகப் பகுதியில் அடங்கியுள்ள பொருளை முழுமையாக விளங்கிக் கொள்வதேயாகும். சொற்றொடர் ஒன்றை அல்லது குறித்தவொரு வசனத்தொடரை விளக்குவதற்கு எமக்குள்ள பொது அறிவு மிகப் பயனுடையதாகும். - இவ்விளக்கமளித்தலானது உரையொன்றுக்கு அல்லது செய்யுளொன்றுக்கு விளக்கவுரையளித்தல் போன்றதாகும்.

பொதுப்பரீட்சைகளின் போது விளக்கக் கிரகித்தலுக்காக வினா பின் வருமாறு அமையும்.

" பந்தியில் இடம் பெறும் கருத்துக்களுடன் தொடர்புபடுத்தி தடித்த எழுத்தில் காட்டப்பட்டுள்ள (அல்லது கீழே கீறிட்டுக் காட்டப்பட்டுள்ள) எழுத்துக்களில் உள்ள தொடர்புகளின் கருத்தை விளக்குக."

இவ்வினாவின்படி முன் சொல்லப்பட்ட பந்தியில் ( 3ஆம் பக்கத்தைப் பார்க்குக) கீழ்க் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சொற்றொடரானது " அணுக்குண்டுகள் செய்த பேரழிவு " என்பதன் விளக்கம் பின்வருமாறு அமையும்.

அணுக்குண்டு தயாரிப்பதற்கு யுரேனியம், தோறியம் எனப்படும் மூலகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இக்குண்டுகளை வெடிக்கச் செய்யும் போது இம்மூலகங்களின் அணுக்கதிரியக்கம் காரணமாக புவி மேற்பரப்பு மட்டுமன்றி வளிமண்டலமும், கடல் வளமும் மாசுற்று பாதிப்பிற்குட்பட்டு உயிர்கள் அழிவுறுகின்றன. பொருள்கள் சேதமடைகின்றன.

இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஜப்பான் நாட்டில் ஹிரோசிமா, நாகசாகி என்னும் இடங்களில் ஐக்கிய அமெரிக்கப் போர் விமானங்களால் போடப்பட்ட அணுக்குண்டுகள் இரண்டினால் பல இலட்சம் மக்கள் ஏனைய உயிரினங்கள் பல கோடி பெறுமதி வாய்ந்த கட்டடங்கள், பொருள்கள் அழிக்கப்பட்டது மட்டுமன்றி அவ்விடங்களில் இன்னும் கூட புற் பூண்டுகளாவது முளைக்கவில்லையென அறிகிறோம். மேலும், அப்பிரதேசங்களில் ஏற்பட்ட அணுக்கதிர் வீச்சின் தாக்கத்தினால் உடற்குறையுள்ள பிள்ளைகள் பிறப்பதாகவும், ஆய்வுகள் கூறுகின்றன. எனவே, இத்தகைய அளவிடமுடியாத பேரழிவுகள் மீண்டும் ஒரு முறை உலகத்தில் ஏற்படக்கூடாதென்பதற்காக, அணு பற்றிய மறைமுகமான பயம் காரணமாக உலக நாடுகள் எவ்வகைப் பிரச்சனைகள் தங்களுக்கிடையே தலை தூக்கிய போதும் இன்னுமொரு உலக யுத்தம் என்ற நிலையிலிருந்து தப்பித்துக்கொள்ள முயன்று வருகின்றன.

## 3 சுருக்கக் கிரகித்தல்.

நாம் நாள் தோறும் பல சந்தர்ப்பங்களிலே செய்திகள், கதைகள், உரையாடல்கள் போன்றவற்றின் பிரதான கருத்தை மாத்திரம் மனதிற் கொண்டு எமது மொழி நடையில் சுருக்கமாக மற்றவரிடம் கூறுகிறோம். உதாரணமாக தொலைக் காட்சியில் செய்தியறிக்கை வாசிக்கும் போது இரு கட்டங்களாக

முதலில் ஒவ்வொரு சொல்லும் விரிவாக, பொருத்தமான நிகழ்ச்சிப் படங்களைக் கொண்டு காண்பிப்பது மட்டுமின்றி விளக்கச் செய்திகளும் கூறப்படும். கடைசியில் செய்திகளின் சாராம்சம் என்ற தலைப்பில் முன்னர் விளக்கிக் கூறப்பட்டவைகள் சுருக்கிக் கூறப்படும். உண்மையில் இரண்டாவது கட்டமாகிய " செய்திகளின் சாராம்சம் " என்ற முறையில் வாசிக்கப்படும் செய்திகளின் சுருக்க முறையே " சுருக்கக் கிரகித்தல்" என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

### 3:1 சுருக்க கிரகித்தல் அம்சங்கள்:

சுருக்கமெழுதலுக்கு முதற்படி கிரகித்தலேயாகும். ஒரு பந்தியை அல்லது வாசகப் பகுதியைக் கிரகித்துக் கொள்வதற்கு பின்வரும் அம்சங்கள் அவசியமாகும்.

(1) தரப்பட்ட பகுதியை நன்கு வாசித்தல் வேண்டும்.

(2) ஒரு முறை வாசித்து விளங்கிக்கொள்ள முடியாதுபோயின் விளங்கிக்கொள்ளும் வரை மீண்டும் மீண்டும் வாசித்தல் வேண்டும்.

(3) பந்தியில் தரப்ப ட்ட சில பகுதிகள் ஒரே முறையில் விளங்காது இருக்கலாம். அப்பகுதிகளை வாக்கியம் வாக்கியமாக படித்து விளங்கிக்கொள்ளல் வேண்டும்.

(4) மயக்கமாக அல்லது விளக்கமற்று இருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் தெளிவுபடுத்திக்கொள்ளல் வேண்டும்.

(5) வாசிக்கும் பகுதி இன்னது பற்றியது என அறிந்து கொள்ளல் வேண்டும்.

(6) வாசிக்கும் பகுதியின் எழுதியவரின் நோக்கம் என்ன என்பதை அதாவது எடுபொருள் என்ன என்பதை தெளிவாக விளங்கிக்கொள்ளல் வேண்டும்.

(7) எடுத்துக்கொண்ட பொருளைப்பற்றி எழுதியவர் எவற்றைக்கூறுகிறார் என அறிந்து கொள்ளல் வேண்டும்.

* இவ்வாறு கிரகித்துக்கொண்ட பின்னர்

(அ) மூலப்பந்தியில் காணப்படும் பிரதான கருத்துக்களையும்,

(ஆ) சார்ப்புக்கருத்துக்களையும் தொகுத்தெடுத்து,

(இ) அவையிரண்டினையும் வைத்து 1/3 பங்காக அல்லது வினாவில் கேட்கப்பட்ட சொல் எண்ணிக்கைகளுக்கடக்கமாக சுருக்கியெழுதல் வேண்டும்.

### 3:2 சுருக்கமெழுதும்போது கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகள்.

(1) சுருக்கத்தில் மூலப்பந்தியின் கருத்து சிதைவின்றியிருத்தல்.

(2) கூறுவோனின் (எமது) சொந்தக்கருத்துக்களும் அபிப்பிராயங்களும் சுருக்கத்தில் இடைச்செருகளாக நுழையக்கூடாது.

(3) சொல்வோனின் (எமது) சொந்த மொழிநடையில் சுருக்கம் அமைதல் வேண்டும்.

(4) இலக்கண ப்பிழையின்றி தெளிவுற எழுதப்படல் வேண்டும்.

## 3.3 சுருக்கத்தின் அடிப்படை நெறிகள்.

சுருக்கமொழியினை எழுதும்போது பின்வரும் நடைமுறைகளைக்கைக் கொள்ளின் சுருக்கத்தை வினாவில் கேட்கப்பட்ட சொற்றொகைக்கேற்ப சரியாக எழுதிக்கொள்ளமுடியும்.

(1) உதாரணங்களைத் தவிர்த்தல்.
(2) விரிவான முறையில் உள்ள ஒரு விடயம் பற்றிய விளக்கங்களை சுருக்கி எழுதல்.
(3) வர்ணனைகளை நீக்கி எழுதல்.
(4) உவமானங்களைத் தவிர்த்தல்.
(5) நேர் பொருளை விடுத்துக் குறிப்புப் பொருளில் எழுதல்.
(6) கூறிய கருத்துக்களை மீண்டும் கூறாது தவிர்த்தல்.
(7) ஒப்புமை, வேற்றுமை காட்டிக் கூறப்படும் கருத்துக்களில் வேற்றுமைக் கருத்துக்களைத் தவிர்த்தல்.
(8) பந்தியில் அல்லது வாசகப் பகுதியில் உள்ள கருத்தோடு சம்பந்தமில்லாத புறம்பான விடயங்களைத் தவிர்த்தல்.
(9) தன்கூற்றுப் பகுதிகளை பிறர் கூற்றுப் பகுதிகளாக்கி எழுதல்.
(10) வினா வாக்கியங்களை கூற்று வாக்கியங்களாக அமைத்து எழுதல்.
(11) நீண்ட வாக்கியங்களுக்குப் பதிலாக ஒரு சொல் வாக்கியங்களில் எழுதல்.

## 3.4 சுருக்கம் எழுதும் படிமுறை:

(1) வாசித்தலும் கிரகித்தலும்.
  (அ) மூன்று முறையாவது வாசித்தல்.
  (ஆ) தலைமைக் கருத்தை (பிரதான கருத்தை) தலையங்கமாகஇடல்.
  (இ) சார்புக் கருத்துக்களை உப தலையங்களாக இட்டுக் குறிப்பெடுத்தல்.
(2) குறிப்புருவில் அமைந்த கருத்துக்களை நிரல்படத்தொகுத்தல்.
(3) இவ்வாறு தொகுக்கப்பட்ட குறிப்புக்களைக் கொண்டு சொந்த மொழி நடையில் சுருக்கத்தை எழுதல்.
(4) எழுதிய சுருக்கத்தை மூல உரையுடன் ஒப்பிடுதல்.
(5) சொல் எண்ணிக்கையைக் கணித்தல்.

## 4. கிரகிக்கும் உண்மைக் கூற்றுக்களும், மாற்றுக் கூற்றுக்களும்.

கிரகித்தலின் இன்னொரு முக்கிய அம்சம் வாசகப்பகுதியொன்றுக்கு பொருந்தும் கூற்றுக்களையும், பொருந்தாக் கூற்றுக்களையும் இனங்கண்டு அவற்றிற் சரியானவற்றைக் கண்டறிதலாகும். இதன் மூலம் கிரகித்தலின் உண்மைத் தன்மையினைத் தெளிவாக விளக்கிக் காட்ட முடியும். உதாரணமாக பின்வரும் பந்தியின் மூலம் இதனை நோக்கலாம்.

" மனிதன் உயிர் வாழ்வதற்கான அடிப்படைகளில் ஒன்று உணவேயாகும். அத்துடன் பசியை ஒழிப்பதே மனிதத் தேவையின் அடி நாதமுமாகும். சீனா போன்ற சோஷலிச அமைப்புக் கொண்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தவிர்ந்த ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சந்தைப் பொருளாதாரத்தில் மிக மோசமாக போஷாக்குப் பற்றாக்குறையுடன் வாழும் மக்களின் எண்ணிக்கை இந்நாடுகளின் மொத்தச் சனத்தொகையில் 22%ஆல் உயர்ந்துள்ளதென உலகஉணவு விவசாய ஸ்தாபனம் கணித்துள்ளது. உண்ணுவதற்குப் போதிய போசனை நிறைந்த உணவின்மையினாலேயே பெருந்தொகையானோர் மந்த போசனைக்குட்பட்டு இன்னலுறுகின்றார்கள். இப்பிரச்சனைக்கு உணவு உற்பத்தி மட்டும் போதிய தீர்வாகிவிட முடியாது. சீரிய உணவு விநியோகமும், சிறந்த - போசாக்குள்ள உணவு வகைகள், சுகாதார கவனிப்புக்கள் என்பனவும் யமாகும்."

* இங்கு, இவ்வாசகப் பகுதிக்கு நால்வர் தந்த விளக்கங்கள் பின்வருமாறு.

'ஏ' என்பவர்: போதிய உணவு உற்பத்தி காணப்படுமாயின் மந்த போசனைக்குட்படாது மக்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

'பி' என்பவர்:- மக்களுக்கிடையே நிலவும் மந்த போசனையை நீக்குவதற்குப் போதிய உணவு உற்பத்தியும் சீரான உணவுப் பங்கீடும் சுகாதார மருத்துவ வசதிகளும் அவசியமாகும்.

'சி' என்பவர்: மக்களிடையே உயர் மட்டத்தில் நிலவும் மந்த போசனையையில்லாதொழிப்பதற்கு உண்ணுவதற்குப் போதியளவு உணவும் போசனைகள் நிறைந்த உணவு வகைகளும் சீராக வழங்கப்படுதல் அவசியமாகும்.

'டீ' என்பவர்: உணவுப்பற்றாக்குறையினால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் போசாக்குப் பற்றாக்குறைக்குட்பட்ட மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டு வருகின்றன.

* மேற்கூறப்பட்ட நால்வரின் கூற்றுக்களிலும் எவரின் கூற்று குறித்த வாசகப் பகுதிக்கு மிகப் பொருத்தமானது? வாசகப் பகுதியில் எழுதியவரின் எடு பொருள் என்ன? இதற்கு விடையாக,

ஒன்று, உணவு உற்பத்தி,.
மற்றயது, மந்த போசனை.
ஆக " உணவும் மந்த போசனையும்" எடுபொருளாகும்.

* வாசகப் பகுதியில் எழுதுவரின் குறிக்கோள் என்ன?

" மந்த போசனையை இல்லாதொழித்தலாகும்".

* வாசகப் பகுதியில் மந்த போசனையை இல்லாதொழிப்பதற்காக ஆசிரியர் சொல்லும்- ஆசிரியரின் கூற்று.

" போசனையுள்ள உணவுப் பொருள்களை மக்களுக்குச் சீராகப் பங்கீடு செய்தல்."

ஆக, " மந்த போஷனையை இல்லாதொழிக்க போசனை உள்ள உணவுப் பொருள்கள் மக்களுக்குப் பங்கீடு செய்யப்படுதல் வேண்டும்." என்பதாகும். இது 'சீ' என்பவரின் கூற்றுடன் பெரும்பாலும் பொருந்துவதாக அமைகின்றது. எனவே, மேற்படி வாசகப்பகுதியில் பொருந்தும் கூற்று 'சீ' யின் கூற்றாகும். ஏனைய மூன்று கூற்றுக்களும் பொருந்தாக் கூற்றுக்களாகும்.

பொது கிரகித்தல் பரீட்சை வினாக்கள் கேட்கப்படும் போது அது பின்வருமாறு அமையும்.

பின்வரும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றின்கீழும் அ, ஆ, இ எனக் குறிப்பிடப்பட்ட மூன்று கூற்றுக்கள் காணப்படுகின்றன. இம்மூன்று கூற்றுக்குள் எக் கூற்று குறிப்பிட்ட உரைப்பகுதிக்கு மிகவும் பொருத்தமானது என்பதைக் குறிப்பிடுக.

நாம் மேற்சொல்லப்பட்ட வாசகப்பகுதியை முதலாம் வாசகப்பகுதி என்றும் அவ்வாசகப்பகுதிக்கு நால்வர் தந்த விளக்கங்களில், உதாரணமாக, 'பி, சீ, டீ' என்பவர்களின் கூற்றுக்கள் மூன்றினையும் முறையே (அ), (ஆ), (இ) எனவும் எடுத்துக் கொண்டால் அவ்வினாவிற்கான சரியான விடை பின்வருமாறு அமையும்.

வாசகப்பகுதி (1), விடை (ஆ)
ஆகவே, விடை (1) - (ஆ) ஆகும்.

## 5. தொகுத்துக் கிரகித்தல்

நிகழ்வொன்று அல்லது செய்தியொன்று பல்வேறு ஊடகங்களினூடாகக் கிடைக்கப் பெறும் போது அவை எல்லாவற்றையும் ஒன்றாகத் தொகுத்து விளங்கிக் கொள்ளுதலையே " தொகுத்துக் கிரகித்தல். " எனப்படும். தரப்படும் செய்தி அம்சங்களை ஆய்ந்து அறிந்து கொள்வது மட்டுமன்றி ஒப்புநோக்கி விளங்கிக் கொள்வதும் மிகப்பயனுடையதாகவமையும். பல்வேறு செய்திகளையும் ஒரு தனியான மெய்ச் செய்திக் குறிப்பாகத் தொகுத்து முக்கிய செய்திகள் ஒன்றையும் தவறவிடாது எழுதல் இத்தொகுத்துக் கிரகித்தலின் முக்கியத்துவமாகும்.

உதாரணம்:

இலங்கையில் உள்ள ஒரு புதினப் பத்திரிகைக்கு வெவ்வேறு நாடுகளில் இருந்தும் ஒரே தினத்தில் கிடைக்கப் பெற்ற புதினங்கள் வருமாறு. அவை ஒவ்வொன்றிலுமுள்ள விபரங்களை ஒரு தனியான மெய்ச்செய்திக் குறிப்பாக எழுதுக.

செய்தி: 1

கேப்டவுன் - 10 செப்ரம்பர், 1988

இனவொதுக்கல் கொள்கையை உலகிலிருந்து இல்லாதொழிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்யும் அருள்மிகு பரிசுத்தவாளன் அவர்கள் பல்வேறு எதிர்ப்புக் கோசங்களுக்கு மத்தியிலும் கேப்டவுன் விமான நிலையத்தில் வந்திறங்கினார். என் வகையிலாயினும் அவரின் பாது

பரிசுத்தவாளன் கேப்டவுனில் உரையாற்றுகையில் ஆண்டவன் தனது கை வண்ணத்தின் தன்மைகளை உலகிற்குக் காட்ட வேண்டும் என்பதற்காகவே மனிதனில் நிற வேறுபாட்டை ஏற்படுத்தினானே ஒழிய மக்கள் மாக்களாக மாறி உயிர் கொலைகள் செய்வதற்கல்ல, உலக மக்கள் யாவரும் நிற வேறுபாடற்று கருணை கொண்டு நோக்குதல் வேண்டுமென்று வினயமாக கேட்டுக் கொண்டார்.

செய்தி: 2

உறரோரா-11 செப்டம்பர் 1988

இனவொதுக்கல் கொள்கை மீது கடுமையான தாக்குதல் ஒன்றைத் தொடுத்ததுடன் பிராந்திய ரீதியான நெருக்கடிகளில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் வன்முறைகளைக் கைவிட வேண்டுமென்ற கோரிக்கை விடுத்தவண்ணம் " பரிசுத்தவாளன்" அவர்கள் தனது ஆபிரிக்காக் கண்ட விஜயத்தை ஆரம்பித்துள்ளார். கடந்த சனிக்கிழமை உறரோரா வந்திறங்கிய பரிசுத்தவாளன் மனித அசமத்துவத்தின் நிற வெறி வடிவமென இது பொதுமக்களை வர்ணித்ததுடன் அது தொடர முடியாது என்றும் திட்டவட்டமாகச் சொன்னார்.

செய்தி: 3

வத்திக்கான், 13 செப்ரம்பர்-1988

ஆபிரிக்காகக் கண்டத்தில் இனவொதுக்கல் கருணை வேண்டுகோள் விஜயத்தை மேற்கொண்டு ஐந்து நாடுகள் சென்று மீண்ட பரிசுத்தவாளன் அவர்கள் இன்று தனது வாசஸ்தலத்தில் வைத்து பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றும் போது இனவாதம் என்பது ஆட்சியாளர்கள் தமது நிலைப்பாட்டை உறுதியாக்கிக் கொள்வதற்காக ஏற்படுத்திக் கொண்ட ஒன்றாகும். அது கடவுளால் ஆக்கப்பட்டதல்ல என்றார். மனிதன் கருணை உள்ளம் திறந்து செயற்படின் இவ்வினவாதம் தென்கண்டப் பனிப்பாறைக்குள் மூழ்கி விடும் என்று திடமாக எடுத்துரைத்தார்.

விளக்கம்:

மேற்படி மூன்று புதினப்பத்திரிகைகளிலும் கூறப்பட்டுள்ள விபரங்களை ஒரு தனியான மெய்ச்செய்திக் குறிப்பாகத் தொகுத்து ஒரு முக்கிய செய்தியாக ஆக்கி எழுதலே தொகுத்துப் பிரசுரித்தலாகும்.

செய்திகளை அல்லது விபரங்களைத் தொகுத்து பிரசுரிக்கும் போது ஒவ்வொரு செய்தியிலிருந்தும் அல்லது விபரத்திலிருந்தும்.

அ. உண்மைப் பொருளை அல்லது பிரதான கருத்தையும்,

ஆ. சார்புக் கருத்துக்களையும்.

வரிசைக் கிரமப்படி தொகுத்தமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதாவது புதினங்கள் கூறும் விடயம் என்ன? அது கூறப்பட்டுள்ள பாங்கு, காலம், இடம், செய்தியாளரின் நோக்கம் முக்கியத்துவமுடைய செய்திப் பகுதி, எதிர்பார்க்கப்படும் பலர்பலன் என்பன அமையத்தக்கதாக தொகுப்பு அமைதல் வேண்டும்.

மேலே கொடுக்கப்பட்ட மூன்று செய்திகளின் வாசகப்பகுதிகளில் இருந்தும் பெறப்பட்ட உண்மைப் பொருள் பின்வருமாறு.

" இனவொதுக்கல் கொள்கைகளையும் அதன்பால் நிகழும் நடவடிக்கைகளையும் கண்டித்தலாகும்".

சார்புக் கருத்துக்கள் பின்வருமாறு.

* மனித நிற வேறுபாட்டுக்கான காரணம்.
* உயிர் கொலைகளை மறுத்தல்.
* கருணை உள்ளம் கொண்டு நோக்குதல்.
* வன்முறைகளைக் கைவிடல்.
* இனவாத ஆட்சியாளர்களைக் கண்டித்தல் என்பனவாம்.

மேற்படி உண்மைப் பொருள், சார்புப் பொருளின் படி தொகுத்துக் கிரகித்தல் பின்வருமாறு அமையும்.

" பரிசுத்தவான் அவர்கள், இன்று உலகில் விசுவரூபமெடுத்துக் காணப்படும் இனவொதுக்கலினால் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை. என்பதை உலக மக்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் எடுத்து விளக்குமுகமாக 1988 செப்டம்பர் திங்கள் 10ம் 11ம் 13ம் திகதிகளில் ஆபிரிக்க நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். மொஸம்பிக்

பரிசுத்தவான் அவர்கள் அந்நாடுகளில் பலத்த எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் மனித வேறுபாட்டுக்கு விளக்கமளித்தது மட்டுமன்றி மக்கள் நிற வேறுபாடு காட்டாது வன்முறைகளைக் கைவிட வேண்டும். என வினயமாகக் கேட்டுக்கொண்டார். ஆட்சியாளர்களின் இனவொதுக்கல் மீது கொண்டுள்ள நிலைப்பாட்டைத் தகர்த்தெறியும் வகையில் இனவொதுக்கல் கொள்கைகளையும் அதனால் நிகழ்ந்து கொண்டிருக்கும் அனர்த்தங்களையும் வன்மையாகக் கண்டித்தார். இப்பிரச்சனைக்குத் தீர்வு காண ஒவ்வொரு மனிதனும் கருணை உள்ளம் கொண்டு நோக்க வேண்டுமென ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

## 6. வினாக்கிரகித்தல்.

வினாக்களை வேண்டும் வகையில் வினாக்கொத்து முறையில் அமைவது வினாக் கிரகித்தல் எனப்படும். பரீட்சாத்திகளின் ஆய்வறிவினை- அவர்களின் கிரகித்தல் திறனை அளவிடும் ஒரு முறையாக இவ்வினாக் கிரகித்தல் முறை அமைகின்றது. எனவே கூறப்பட்ட விளக்கக் கிரகித்தல் போன்றே நாம் கேட்பனவற்றையும் வாசிப்பனவற்றையும் நுணுகி ஆராய்ந்து வினாக்களுக்கு விடை எழுதலை இது குறிக்கும்.

விளக்கக் கிரகித்தலின்போது கொடுக்கப்பட்ட சொல்லுக்கு அல்லது சொற்றொடருக்கு விளக்கவுரை எழுதும்போது நமக்குள்ள பொது அறிவு பயன்படுகின்றது. ஆனால் வினாக்கிரகித்தலின் வாசகம் ஒன்றில் அடங்கியுள்ள பிரதான கருத்துக்களைக் கொண்டு வினாவப்படும் வினாக்களுக்கு விடை அளிக்கும் வகையை இம்முறை சார்ந்து நிற்கிறது.

வினாக் கிரகித்தல் முறையில் விடை அளிக்கும்போது அது இரு வகைகளில் எதிர்பார்க்கப்படுகின்றது.

1. கொடுக்கப்பட்ட விடயங்களுக்கு உட்பட்டதாக விளக்கமான விடை கொடுத்தல்.
2. கொடுக்கப்பட்ட பந்திக்கு அப்பால் இருந்து விடை கொடுத்தல்.

இவ்விரண்டாவது வகையான வினாவிற்கு விடை அளிக்கும்போது சரியான விடையைக் கண்டுபிடித்தே விடை எழுதல் வேண்டும். இந்நிலையில் உரிய விடை குறித்த பந்தியில் உட்பொருளில் தொக்கி நிற்கும்.

வினாக்கிரகித்தல் முறையில் கேட்கப்படும் வினாக்கள் சாதாரணமாக அமைவதில்லை. ஆய்வுகளுடன் கூடிய நாட்டின் அபிவிருத்தி, எதிர்கால வேலைத் திட்டங்கள், விஞ்ஞானம், சமூக அபிவிருத்தி போன்றவற்றுடன் தொடர்புடைய தாகவே பெரும்பாலும் அமையும். வினா அமைப்பு முறையானது, காரணங்கள் விபரங்கள், விளக்கங்கள் கேட்பனவாகவும் ஆய்வுடன் கூடியதாகவும் பலாபலன்களை கண்டு சொல்லுதல்களாகவும் அமையும். எனவே வினா அமைப்பு என்ன வகை யானது என்பதனை இனங்கண்டு அதன் பின்பு சரியான விடை அளித்தல் அவசிய மாகும்.

வினாக்கிரகித்தல் கேள்விகளுக்கு விடை எழுத பின்வருவன கடைப்பிடிக்கப் படல் வேண்டும்.

1. பந்தியில் உள்ள பொருளை வினாவிற்கு ஏற்ற வகையில் விளங்கி நுணுகி ஆராய்ந்து அறிதல்.
2. எழுதியவரின் நோக்கம், ஒரு பொருள் என்பன போன்ற விபரங்களை கூறுபடுத்தி அறிந்து கொள்ளல் வேண்டும். உண்மைப் பொருளை அறிவதில் கஷ்டம் ஏற்படின் உதாரணங்கள் தரப்பட்டிருந்தால் அவ்வுதாரணங்கள் குறிப்பிடும் பொருளைக் கொண்டு உண்மைப் பொருளை கிரகித்துக் கொள்ளல் வேண்டும்.
3. என்ன வினாவப்படுகிறதென்பதை சரியாக ஞாபகத்தில் இருத்திக் கொண்டு, வினாவிற்கு ஏற்ற விடை அறியப்படும் வரை- விளங்கிக் கொள்ளும் வரை பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்தல் வேண்டும்.

4. பந்திகளைப் படிக்கும்போது ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு நோக்கத்திற்காக முன்னிலும் பார்க்க ஆழ-அகல, ஆற- அமர படித்தல் அவசியமாகும்.

5. விளங்காத அல்லது மயக்கமான காணப்படும் சொற்களை அல்லது சொற்றொடர்களை தெளிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். பல பொருள் தரக் கூடிய சொல் அல்லது சொற்றொடர்கள் காணப்படின் அவற்றின் முன்னால் அல்லது பின்னால் சார்ந்துவரும் சொற்களின் இயல்புகளைக் கொண்டு அவற்றின் பொருளை மதிப்பீடு செய்து விளங்கிக் கிரகித்துக் கொள்ளல் வேண்டும்.

6. வினாக்களுக்கான விடைகளை இனங்கண்டு கொண்ட பின் விடைகள் எழுதப்படல் வேண்டும். எழுதப்படும் விடைகள் இலக்கங்களை அமைப்புடைய வாக்கியங்களாக அமைதல் வேண்டும். ஒரு சொல்லையோ அல்லது ஒரு சொற்றொடரையோ விடையாக எழுதுதல் தவறாகும்.

*****************

## கிரகிப்புத் திறன்.

### மாதிரி வினாத்தாள் - 01

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

(1) பின்வரும் பந்திகளை வாசித்து,

(1) ஒவ்வொரு பந்தியிலும் இடம் பெறும் பிரதான கருத்தை இயன்றளவு சுருக்கமாக ஒரு வாக்கியத்திற் தருக.

(2) பந்தியில் இடம் பெறும் கருத்துக்களுடன் தொடர்பு படுத்தி, கீறிட்டு காட்டப்பட்டுள்ள எழுத்துக்களில் உள்ள தொடர்புகளின் கருத்தை விளக்குக.

(அ) தற்காலத்தில் குடிசைக் கைத்தொழில் மூலம் உற்பத்தி செய்யப்படும் அலங்காரப் பொருள்களுக்குக் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக தோன்றுகிறது. தொடக்கத்தில் பயன்பாட்டுக்குரிய எல்லா உற்பத்திப் பொருள்களும் குடிசைக் கைத்தொழில் மூலமே செய்யப்பட்டிருந்தன. ஆனால் உற்பத்தித் துறையில் யெந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்தும் தொழிற்சாலை மட்டத்தில் இப்பொருள்களின் உற்பத்தி மேற்கொள்ளப் பட்டதிலிருந்தும் குடிசைக் கைத்தொழில் பொருள்கள் ஏதோ விசேட தன்மையுடைய பொருள்களாக கருதப்பட்டன. அவைதனித்தன்மை வாய்ந்த <u>கலாச்சார உருவங்களாகக்</u> கொள்ளப்பட்டன. அதனை உருவாக்கும் கலைஞனின் ஆளுமை அப்பொருளின் முக்கியதோர் அம்சமாகக் கருதப்பட்டது. இவ்வகையில் சிந்திக்கையில் கைப்பணியின் மூலம் பொருளாதார அபிவிருத்தி பற்றிச் சிந்தித்தல் அர்த்தமற்றதென வாதிக்கப்படுகிறது.

(ஆ) தொடக்கத்தில் ஊழியர்களின் மூன்றிலொரு பகுதியினர் மட்டும் பாத்தியங்களை வாங்கினர். இப்பொழுது இத்தொகை அறுபத்தைந்து சத வீதமாக உயர்ந்திருக்கின்றது. ஊழியர்களிற் பலர் தம் <u>வாணுள் சேமிப்புக்களை முதலீடு செய்தல்</u>. அல்லது வீடுகளை அடகு வைத்து கம்பனிப் பாத்தியங்களை வாங்கினர். அவர்களில் எவருமே அதற்கு முன் கம்பனி பாத்தியங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருந்ததில்லை. வர்த்தமானங்களில் இந்நிலை மாறியுள்ளது. இதன் விளைவாக சாதாரண வருமானமுடையவர்களாகவிருந்த நல்ல விலையுயர்ந்த வீடுகளை வாங்க கூடியவர்களாகவும் உலகச் சுற்றுலா மேற்கொள்ளக் கூடியவர்களாகவும் மாறியுள்ளனர்.

(இ) உலகச் சூழலில் நாளுக்கு நாள் மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே வருகிறது. விரைவாகப் பெருக்கமடைந்து கொள்டு வருகின்ற இத்தகை பெரும் சனத்தொகை வாழ்வதற்கு அவசியமான நீர், கனியங்கள், நிலம், வீடு, தாவரம் ஆகியன புவியிலே <u>வரையறுக்கப்பட்ட அளவிலேயே</u> உண்டு. சனத்தொகை அதிகரிப்பதற்கிணங்க இவ்வளங்கள் அதிகரிப்பதில்லை. உண்மையிலேயே அவற்றிற் குறிப்பிடத்தக்கவைகளை மனிதச் செயற்பாடுகள் காரணமாக பயன்படுத்த முடியாத நிலையை அடைகின்றது. எனவே, இத்தகைய வளக் கொள்ளலை மிகக் கரிசனையோடும் அளவோடும் பேணிப்பாதுகாக்க வேண்டியது எமது கடப்பாடாகும்.

(2) பின்வரும் பகுதியின் சுருக்கமொன்றை அறுபத்தைந்து சொற்களில் எழுதி, அதற்குப் பொருத்தமான ஒரு தலையங்கமும் தருக. (நீர் உபயோகித்துள்ள சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

ஆசிய நாடுகள் பலவற்றின் அரசியல் பொருளாதார விருத்திகள் தொடர்பான கடந்த கால வர்த்தமான போக்குகளை, அண்மைக்காலங்களில் இப்பிராந்தியங்களில் அதிகரித்துவரும் தேசிய இயக்கங்களையும் நவகுடியேற்றவாத நடவடிக்கைகளையும் பரிசீலிப்பதன் மூலம் சிறப்புற புரிந்து கொள்ளலாம். எனது அபிப்பிராயப்படி ஒரு "தேசிய இயக்கம்" என்பது "கலாச்சார, பூகோள, மொழி, சமய அல்லது அரசியல் உறவுகளின் அடிப்படையிலான உணர்வும், புரிந்து கொள்ளலுமுடைய உறுப்பினர்களாகளால் கட்டுண்ட ஒரு சமுதாயக்குழு தனது பொதுவான பரஸ்பர நலன்களை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளும் ஒழுங்கமைத்த முயற்சி" என விவரிக்கப்படலாம்.

அன்னிய வல்லரசொன்றின் ஆதிக்க அச்சுறுத்தல், ஆதிக்கபலம் கொண்ட அன்னிய கலாச்சாரம் ஒன்றினால் ஆட்கொள்ளப்பட்ட கலாச்சாரமொன்றின் எதிர்கொள்ளலிலிருந்து எழும் அதிருப்தி, அன்னியமயமாதல் என்பன இத்தகைய இயக்கங்களைத் தோற்றுவிக்கலாம். "தேசிய வாதம்-பழமையும் புதியதும்" எனும் தனது நூலின் பேராசிரியர் செடன் வொட்சன் என்பார் தேசிய இயக்கமொன்று முதலில் அன்னிய ஆட்சி ஒன்றிலிருந்து சுதந்திரம் பெறுவதற்கான போராட்டமாகத் தோற்றமெடுக்கலாம். அல்லது தேசிய உளப்பாங்கொன்றினைத் தோற்றுவிக்கும் ஒரு முயற்சியாகவும் தோற்றமெடுக்கலாம்" எனக் கூறியுள்ளார்.

ஆசிய நாடுகளில் தேசிய இயக்கங்களின் வளர்ச்சிக்கு இக்காரணிகளில் பல பங்களிப்புச் செய்துள்ளனவென்பது உண்மையென்றும் அதேவேளை மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் பெறப்பட்ட தேசியவாத அபிவிருத்திப் போக்குக்களும் சிந்தனைக் குழும் தமது செல்வாக்கையும் பிரயோகித்துள்ளன என்பதும் முன்மதரிக்குப்பட வேண்டியதாகும். அதுமட்டுமன்றி உள்ளூர்த்தலைவர்கள் சிந்தனையாளர்களான சன்யாட்சென், மாவோ செ துங், காந்தி, முஹம்மதலி ஜின்னா, அவுங் சாங், சுகார்னோ, எப். ஆர். சேனநாயக்கா ஜேம்ஸ் பீரிஸ், அநாகரிக்க தர்மபால, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டார நாயக்க போன்றோரின் சிந்தனைகளும், அன்வர்களின் நாடுகளின் தேசிய இயக்கங்களில் குறிப்பிடத்தக்க செல்வாக்குப் பிரயோகித்துள்ளன. இத்தேசிய இயக்கங்கள் தோன்றாத இடங்களில் வர்த்தமானங்களில் கூட் உதவி வழங்கல் என்ற போர்வையில் வல்லரசு நாடுகள் நவ குடியேற்றவாதர் திணிப்பை மேற்கொண்டு வருகின்றன. இதனால் மீண்டும் ஏகாதிபத்தியத் திணிப்பு பிரயோகிக்கப்பட்டு பொருளாதாரத் சூறையாடல் தொடர்கிறது. இதற்கு தென் ஆபிரிக்கா, அஜர்டீனா போன்ற தேசங்களை ஆதாரப்படுத்தலாம்.

3. பின்வரும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் இறுதியிலும் (அ), (ஆ), (இ) என மூன்று கூற்றுக்கள் காணப்படுகின்றன. இக்கூற்றுக்களுள் எக்கூற்று குறிப்பிட்ட உரைப் பகுதிக்கு மிகவும் பொருத்தமானது என்பதைக் குறிப்பிடுக.

(உதாரணம்: உமது கருத்துப்படி (1) ஆம் வினாவுக்கு (அ) விடை சரி எனின் விடை இவ்வாறு அமைய வேண்டும் (1) - (அ)

(1) பல்வேறு காரணங்களால் மனித சமுதாயத்தில் மோதல்கள் ஏற்படுகின்றனவெனவும் வரலாறு கண்ட மோதல்களில் சில ஆயுதப் போராட்டங்களாக மாறி, உலக யுத்தங்களாக மாறி விசுவரூபமெடுத்ததை சரித்திரங்கள் வாயிலாக நாமறிவோம். நவீன விஞ்ஞான அறிவு மனித இனத்தின் முன்னேற்றத்திற்காக மட்டுமின்றி சில வேளைகளில் மனித இனத்தில் அழிவுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால், நாடுகளுக்கிடையே ஏற்படும் சர்வதேசப் பிரச்சினைகளுக்கு தீர்வுகான ஆயுதங்களைப் பயன்படுத்தல் அர்த்தமற்றவொரு செயல் என உணரப்படும் வரை பேரழிவை நிறுத்திவிட முடியாது.

(அ) ஆயுதப் போராட்டங்களை உலக யுத்தங்களாக மாறின.

(ஆ) சர்வதேசதங்களுக்கிடையில் ஏற்படும் பேரழிவை ஆயுதங்களால் இல்லாமல் செய்ய முடியாது.

(இ) நவீன விஞ்ஞான அறிவு அவனது ஆக்கத்திற்கும் அவரின் அறிவுக்கும் காரணமாக அமைகிறது.

(11) சமத்துவம் என்பதன் கருத்து உரிமைகளையும்பொறுத்த மட்டில் எல்லோரும் சமமதை என்பதாகும். ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சுதந்திரப் பிரகடனத்தில் " சகலரும் சம உரிமைகளுடன் படைக்கப்பட்டுள்ளனர்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உடல் ரீதியாகவேனும், உள ரீதியாகவேனும் இருவர் ஒருவரையொருவராக ஒத்தவர்களாக இருக்க முடியாது. உருவம், செல்வம் ஆகியவற்றினைப் பொறுத்தமட்டில்கூட எமக்கிடையே வேற்றுமைகள் உள. என்றும் குடியாட்சியில் அங்கத்தவர்கள் சமமாகும்.

(அ) குடியாட்சியின் வெற்றிக்கு மக்களிடையே சமத்துவம் நிலவ வேண்டியது அவசியமாகும்.

(ஆ) சமத்துவம் எனின் சகலரும் சம உரிமைகளுடன் படைக்கப்பட்டிருப்பதாகும்.

(இ) உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் குடிகளின் சமத்துவத்தைக் காண முடியாது.

(111). புராதன சமூகத்தின் கல்விபாடசாலைகளையும் வகுப்பறைகளையும் கொண்டு ஒழுங்கு பெற்றிருக்கவில்லை எனினும் ஒவ்வொருவரினதும் ஆளுமையையும் யை",ம் திறமைகளையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு கல்வி தொடர்ந்து படிமுறை வளர்ச்சியைபு் பெற்றது. சமூக அமைப்பு மேலும் சிக்கலான போது ஒழுங்குறுத்திய கல்வி அத்திய வசியப்பட்டது. சமூக மாற்றத்தின் இயல்பிற்கேற்ப அதன் பல்வேறு இலக்குகளை எய்துதற்கேற்ற சக்தி மிக்க சாதனமாயும் கல்வி இடம் பெறத் தொடங்கியது. பிரபுத்துவ சமுதாயத்தில் ஆளும் வர்க்கத்தினர் மட்டுமே ஒழுங்குறுத்திய கல்வியைப் பெற்றனர். ஆளப்படுவோருக்கு அத்தகைய கல்வி அவசியமில்லையெனக் கருதப்பட்டது.

(அ) ஒழுங்கு படுத்திய கல்வி முறை ஆளும் வர்க்கத்துக்கே தேவையான ஒன்றாகும்.

(ஆ) ஆளுமையையும் திறமையையும் ஒழுக்கத்தினையும் வளர்ப்பதற்கு கல்வி அவசியமாகிறது.

(இ) மாறிவரும் சமூக அமைப்பிற்கேற்ப ஒத்துப் போகக் [illegible]

(4) மூன்றாம் உலகநாடுகள் அனைத்தும் விஞ்ஞான அதிகரிப்பையே நோக்கமாகக் கொண்டுள்ளது. சம்பந்தப்பட்ட துறைகளில் விஞ்ஞானப்பணியாளர்களின் தொகையை அவர்கள் சல்லடை போட்டுப் பார்க்கும் நிலையைப் பெறும் வரை அதிகரிப்பது சாத்தியமான விஞ்ஞான உப கமிட்டிகள் ஏற்படுத்தப்படும் வரையிலாகும். இது விஞ்ஞானிகளின் தொகையை அதிகரிப்பது மட்டுமில்லை. ஆய்வுக்கான கருவிகளை வழங்கள் என்பதனை நோக்கமாகக் கொள்வதுடன் மூளைசாலிகளின் வெளியேற்றத்தை தடுப்பதையும் கருத்தில் கொள்ளும்.

(அ) மூன்றாம் உலக நாடுகள் அமைப்பு ரீதியான சபையின் ஒவ்வொரு துறையிலும் மேம்பாடு கொண்டு விளங்கும் விஞ்ஞானிகளின் தொகையை அதிகரிக்கச் செய்வதன் மூலம் மூளைசாலிகளின் வெளியேற்றத்தைத் தடுக்க முடியும்.

(ஆ) அமைப்பு முறையிலான விஞ்ஞானக் கமிட்டிகளை உருவாக்கி புதிய கண்டு பிடிப்பை மேற்கொள்வதன் மூலம் மூளைசாலிகளின் வெளியேற்றத்தைத் தடுக்க முடியும்.

(இ) மூளைசாலிகளின் வெளியேற்றத்தினை தடுப்பதற்காக மூன்றாம் உலக நாடுகள் விஞ்ஞானத் துறையை அதிகரிப்புச் செய்து வருகின்றன.

## கிரகிப்புத் திறன்

## மாதிரி வினாத்தாள் - - 02

( இலங்கைக்கல்வி நிருவாக சேவையின் 111ஆம் வகுப்பிற் ஆட் சேர்ப்பதற்கான வரையறுத்த போட்டிப் பரீட்சை-1988மே)

நேரம்: 20 நிமிடம்.

1. பின்வரும் பந்தியை வாசித்து அதன் இறுதியில் தரப் பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சுருக்கமான விடை தருக.

இந்தியக் கிராமப்புறத்தில் ஓர் ஆணும் பெண்ணும் ஒரு பொழுதும் அருகருகே நடந்து செல்வதில்லை. மனிதன் எப்பொழுதும் முன்னே செல்ல பெண் பின் செல்வாள். அவ்வாறு நடத்தலே இந்திய வழக்கமாகும் என நாமும் அவர்களும் கூறுவோம். இத்தொடரின் கருத்து யாது? அது தெளிவாகக் குறிப்பிடுவது இந்நடத்தைக் கோலம் மிகப் பொதுவான- உண்மையில் வழமையாக அவதானிக்கப் படுவதே என்பதாகும். வழமையான செயல் என்பது மீண்டும் மீண்டும் திரும்பவும் ஆற்றப்படுவதொன்றாகும். ஆனால் வழமை பற்றிய கருத்தில் மீள மீள இடம் பெறுதலிலும் கூடுதலான ஒன்று உண்டு. இவ்வாறு நடந்து கொள்ளாதிருத்தல் பாவம் அல்லது குற்றம் என்றில்லாவிட்டாலும் தவறானது, பொருத்தமற்றது, இவேறு வார்த்தைகளில் கூறின் அது வழமையை மீறிய செயலாகும் என்ற கருத்தும் உண்டு.

தகுந்த நடத்தை, தகாத நடத்தை எனும் கருத்து* வினைத்திறமை யின் தேவைப்பாடுகளுக்கும் கூடுதலாகச் சமூகம் விதிக்கும் மேலதிகமான ஒன்று அது. தேநீர் தயாரிப்பதற்கு ஒருவர் தேயிலையும் வெந்நீரையும் உபயோகிப்பார். தேயிலையைக் குளிர்ந்த நீரில் ஊறவைத்தல் எந்த வழக்கத்தையும் மீறுவதாக அமையாது. அது மடமைத்தனம் மட்டுமே யாகும். ஆனால் ஆங்கில வழக்கம் தேயிலையைக் கொதி நீரில் ஊறவிட்டுக் கிண்ணத்தில் பாலைச் சேர்ப்பதாகும். தேநீர் பருகும் இந்தியக் கிராம வாசிகள் தேப்போச்சிகளை உபயோகிக்கும் பழக்க மற்றவர்களாதலால் பால், நீர், தேயிலை, ஆகிய யாவற்றையும் ஒன்றாகப் பாத்திரத்தில் கொதிக்க வைப்பர்.

அ. பின்வருவனவற்றாற் கருதப்படுவது யாது?

(1) நடத்தைக் கோலம் (2) வழமையை மீறுதல்.

ஆ. வழமை எனப்படுவது யாது?

இ, தேநீர் தயாரிக்கும் எடுத்துக்காட்டின் பொருத்தப்பாடு யாது?

ஈ. மீண்டும் மீண்டும் செய்தல் மட்டும் வழமையை உருவாக்குமா?

* ( சேர்த்து வாசிக்குக)

வினைத் திறமையுடன் எத்தொடர்பையும் கொண்டிருக்கவில்லை.

கிரகிப்புத்திறன்

மாதிரி வினாத்தாள் - 03

(இலங்கை அதிபர்கள் சேவையின் 111ஆந் தரத்திற்கு
ஆட்சேர்ப்பதற்கான வரையறுத்த போட்டிப்பரீட்சை-1991)

நேரம்: 20 நிமிடம்

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அறிவானது அரும்பெரும் பேறாகக் கருதப்பட்டு மிகவும் மதிக்கப்பட்டது. அறிவுக்கான ஒரு திறவு கோலாகக் கல்வி விளங்கியது. மரபுவழியான கற்றல் முறைமையில் ஆசிரியரற்ற கல்வியைச் சிந்திக்கவும் முடியாது. தீவிரமான- பொறுப்புணர்வுடன் ஆசிரியரும் மாணாக்கனும் கூட்டாகத் தொடர்ந்த ஒரு புனித பணியாக அது கருதப்பட்டது. ஆசிரியருக்கும் மாணாக்கனுக்குமிடையில் நிலவிய தொடர்பின் இயல்பான கடமைகளும் கடப்பாடுகளும் அதிகம் ஆள் சார்ந்தவையாகவும் பரஸ்பர மதிப்பினை அடிப்படையாகக் கொண்டும் இருந்தன. ஆசிரியர் தனது மாணாக்கனைத் தனது புதல்வனாகவே நோக்கினார். மாணாக்கனும் ஆசிரியர்பால் பெற்றோர் பால் பிள்ளைக்கு இருக்கும் மதிப்பினைச் செலுத்தி வந்தான். ஆசிரியனின் ஆளுமை மாணாக்கனது குணவியல்பின்உருவாக்கத்தில் பலம் வாய்ந்த செல்வாக்கினைச் செலுத்தியது. ஆசிரியருக்கு மாணாக்கனால் ஆற்றப்பட்டு வந்த தனிப்பட்ட சேவைகள் முழுமையாக அவனது சொந்த விருப்பத்தின் பேரிலேயே ஆற்றப்பட்டு வந்தன. ஆசிரியருக்கு அன்பளிப்புக்களைக் கொணர்தல் பொதுவான செயல்முறையாக இருந்தது.

அறிவைக் கிரகிக்கும் திறன்கொண்ட மாணாக்கர்களுக்குத் தான் பெற்றிருந்த அறிவு முழுவதையும் மறைத்தலின்றி வழங்குதல் ஓர் ஆசிரியனின் கடமையாக இருந்தது. மாணவரிலும் தனது அறிவின் மேம்பாட்டை பேணும் முயற்சியில் இன்றும் நாம் காணக் கூடியதாயுள்ள 'கற்பித்தலில் கஞ்சத்தனம்' (குரு முட்டி) எனும் குறைபாடு பெரிதும் இழிவானதாகக் கருதப்பட்டது. கூலிப்படை வீரனின் போக்கினைக் கொண்டு கற்பித்தலை பிழைப்புக்கு ஒரு வழியாக மட்டும் கருதினோர் சமூகத்தின் மதிப்பில் இழிந்தவர்களாயினர். உண்மையான வாழ்க்கைத் தொழிலாகக் கற்பித்தலைக் கொண்டிருந்த சிறந்த ஓர் ஆசிரியர் மிகவும் கௌரவிக்கப்பட்டார். 'மிலிந்தபன்ஹ' வில் எடுத்துரைக்கப்பட்டபடி ஆசிரியரின் நூற்கல்வி சாராக்கடமைகள் நற்பழக்கங்களை வளர்த்தல், மாணவனுக்கு வழிகாட்டுதல் என்பவற்றை உள்ளடக்கியவையாயிருந்தன. இதன்வழி மாணாக்கன் தீயவற்றைக் கைவிட்டு நல்லதை விடாது பற்றிக் கொள்வான்.

(அ) தமது பெறுமதிமிக்க அறிவின் சிறந்த பாகத்தைக் கஞ்சத்தனமாகப் பேணி வைத்திருத்தலே பண்டைய ஆசிரியர்களின் பொதுவான வழக்கமாயிருந்தது. எனும் கருத்தினை இவ்வுரைப்பகுதி வெளிப்படுத்துகின்றதா?

(ஆ) ஆசிரியர்- மாணாக்கர் தொடர்பின் தன்மை குறித்து கட்டுரையை எழுதியவர் கூறுவது யாது?

**(இ) எவ்வகையான ஆசிரியர்கள் சமூகத்தினால் இகழப்பட்டார்கள்?**

(ஈ) மரபு வழியான ஆசிரியர், யாவரதும் உயர் மதிப்பினைப் பெற்றிருந்த

## சுருக்கத் திறன்

## மாதிரி வினாத்தாள் - 04

( இலங்கைத் திட்டமிடல் சேவையின் வகுப்பு 11 தரம் 11க்கு
ஆட்சேர்ப்பதற்கான வரையறுத்த போட்டிப்பரீட்சை-செப்.1991)

நேரம்: 40 நிமிடம்.

* 1ம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்களுக்கும் விடை தருக.

1988 வரவு செலவுத்திட்ட உரையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகள்.

"சுங்கத் தீர்வைகள்"

1997 ஆம் ஆண்டு இந்த அரசினால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையானது இதற்கு முன்னிருந்த பலதரப்பட்ட இறக்குமதிக் கட்டுப் பாடுகளையும் கோட்டா முறைகளையும் தகர்த்தது. நாட்டில் உள்ள கேள்வி நிரம்பல் அடிப்படையில் வளங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்பதே இக்கொள்கையின் நோக்கமாகும். உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பினைச் சீரமைக்கப்பட்ட தீர்வைகளின் மூலம் மாத்திரமே கொடுப்பதற்கு இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் கோட்டாமுறைகளும் பொருத்தமானவையல்ல எனக் கணிக்கப்பட்டது. சீரானதொரு சுங்கத்தீர்வு அமைப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சனாதிபதி தீர்வைக் கமிஷன் ஒன்று அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டது. இது உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்குத் தேவையான அளவு வரிப்பாதுகாப்பை எல்லாக் கோணங்களிலிருந்தும் ஆராய்ந்த பின் சுங்கத் தீர்வை மாற்றங்களுக்குச் சிபார்சு செய்யக் கேட்கப்பட்டிருந்தது. சனாதிபதி தீர்வைக் கமிஷன் உள்நாட்டு கைத்தொழில் உற்பத்தித்துறையை மிகவும் ஆழ்ந்த முறையில் கணித்து சுங்கத் தீர்வைகளை நல்ல முறையில் மாற்றியமைக்கச் சிபார்சு செய்தது. இவைகளை எனது 1985 ஆம் வருட வரவு செலவுத் திட்டம் மூலம் அமுல் செய்ய வழிப்படுத்தினேன். இதனால் ஏற்பட்ட புதிய தீர்வை அமைப்பு இதற்கு முன்னிருந்த போதிலும் பார்க்க சாலச் சிறந்ததாக அமைந்தபோதிலும் பல கைத்தொழில் முயற்சிகளுக்கு ஒரே அளவிலான பாதுகாப்பை ஏற்படுத்துகின்ற முறைக்கு முற்றாக முன்னேறவில்லை. தீர்வைகள் வழங்கும் பயன்தரு வாய்ந்த பாதுகாப்பைப் பொறுத்த மட்டிலே பல்வேறு கைத்தொழில்களுக்கு இடையேயும் ஒரே கைத்தொழிலில் பல்வேறு உப உற்பத்திப் பொருள்களுக்கிடையேயுங்கூட பெருமளவு சமானமின்மை இன்னும் காணப்படுகின்றது."

" ஏற்றுமதித் தீர்வைகள்"

எமது பாரம்பரிய ஏற்றுமதிப் பொருள்களான தேயிலை, இறப்பர், தெங்குப் பொருள்கள் ஆகியவற்றிலே தற்போது ஏற்றுமதித் தீர்வைகள் அறவிடப்படுவதோடு இன்னும் சிறு கமத்தொழில், கடற்றொழில் பொருள்களிலும் ஏற்றுமதித் தீர்வைகள் அறவிடப் படுகின்றன. ஏற்றுமதித் தீர்வைகளாவன ஒரு நல்ல முறையான வரித்திட்டம் அல்ல என்பதை ஏற்க முடியும். எனவே இந்த ஏற்றுமதித் தீர்வைகளைப் படிப்படியாகக் குறைத்து ஏற்றுமதிகளை ஊக்குவிப்பது அரசின் நோக்கமாகும். அரசாங்கத்திற்குக் கிடைக்கின்ற பெரிய அளவிலான வருமானத்திற்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தினால் பாரம்பரிய ஏற்றுமதிப் பொருள்களில் அறவிடப்படும் ஏற்றுமதித் தீர்வைகளை முற்றாக அகற்ற முடியாது. இருந்தும் சிறு கமத்தொழில் ஏற்றுமதிப் பொருள்களிலும் கடற்றொழிற் பொருள்களிலும்.............

அறவிடப்படும் ஏற்றுமதித் தீர்வைகளை உடனடியாக அகற்ற வேண்டுமென்று பிரேரிக்கின்றேன். இதனால் அரசின் வருமானம் ஏறத்தாழ 5 கோடி ரூபாவால் குறையுமென எதிர்பார்க்கப்படுகின்றது." . . .

" பாரம்பரிய ஏற்றுமதிப் பொருள்களில் அறவிடப்படும் தீர்வையைப் பொறுத்தளவில்/ இறப்பர், தெங்குப் பொருள்களில் அறவிடப்படும் தீர்வைகளில் ஒரு விதமான மாற்றத்தைச் செய்ய நான் கருதவில்லை. ஏனெனில் இந்தத் தீர்வைகளை விலையோடமைந்த தீர்வைகளாகவும் விலை ஏறும் பொழுதும் இறங்கும் பொழுதும் வரிகளும் அதே போல ஏறி இறங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் தேயிலைப் பொறுத்தளவில் இரு விதமான வரிகள் அறவிடப்படுகின்றன. ஒன்று தேயிலை வெந்தீஸ் (ஏல) விலையின் அடிப்படையில் அறவிடப்படும் விற்பனை வரியாகும். மற்றது தேயிலை ஏற்றுமதி செய்யும் துறைவாயில் நிலையானதொரு தீர்வை அறவிடப்படுவதாகும். இந்த நிலையான ஏற்றுமதித் தீர்வையானது தேயிலை விலையின் அடிப்படையில் அல்லாது அறவிடப்படுகின்ற காரணத்தினால் இதனின் தாக்கம் பாதிப்பு அடைவதால் இந்த நிலையான தீர்வையை விலையோடொத்த வரியாக படிப்படியாக மாற்ற வேண்டுமென்பது தேவைப்படுகின்றது. இப்படிச் செய்யாதவிடத்து தேயிலையின் சர்வதேசவிலை வீழ்ச்சியடையும் போது, சில மாதங்களுக்கு முன்னர் இவ்வாறு நடந்தது; அதே தருணத்தில் உற்பத்தியாளர்கள் தமது தேயிலைக்கு உற்பத்திச் செலவிலும் குறைந்த விலை பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உற்பத்தியாளர்கள் உற்பத்திச் செலவை ஈடு செய்ய முடியாத ஒரு மட்டத்தில் இயங்கும் போது ஒரு நிலையான தீர்வையை அறவிடுவது முற்றிலும் நியாயமானதல்ல"

" தாவர பயிர் வரித்திட்டத்தினையும் உற்பத்தியாளர் தொடர்ந்து ஆராய்ந்து படித்துவரும் செயல்முறைக் குழுவொன்று என்னால் நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு 1 கிலோகிராம் மொத்தத் தேயிலையில் இடப்படும் நிலையான வரி ரூபா 5ஐ, ரூபா 3.50ஆகக் குறைக்க சிபார்சு செய்துள்ளது. இக்குழு பெக்குள் அடைத்து விற்கும் தேயிலையின் ஏற்றுமதித் தீர்வை கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 3.50 ஆக இருப்பதை ரூபா 2 ஆகக் குறைக்க சிபார்சு செய்துள்ளது. பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்படும் தேயிலை வரி கிலோகிராம் ஒன்றுக்கு 40 ரூபாவுக்கு மேல் விலை அதிகரிக்குமிடத்து அந்த மிகைக்கு 50% ஆன வரி தொடர்ந்து அமுல் செய்யப்படும் . பைகளில் அடைத்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைக்கு தொடர்ந்தும் தற்போதைய மட்டத்தில் ஏற்றுமதித் தள்ளுபடி வழங்கப்படும், தாவர ஏற்றுமதித் துறை . வரித்திட்டத்தைப் படிக்கும் குழுவின் மேற்கூறிய சிபார்சுகளை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்." - . .

1 . இறக்குமதிகள் ஏற்றுமதிகள் ஆகியன மீதான வரிவிதிப்பு சம்பந்தமான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் போது முரண்பாடான குறிக்கோள்கள் இரண்டினை நிதி அமைச்சர் இணங்கச் செய்தல் வேண்டும். கீழே தரப்பட்டுள்ள நான்கு கூற்றுக்களில் நிலைமையைச் மிகச் சிறப்பாக விபரிக்கும் கூற்றினைத் தெரிவு செய்க.

அ. உள்ளூர் கைத்தொழிலைப் பாதிக்காதும் போதே அரசாங்க வருமானத்தைப் பாதுகாப்பது.

ஆ: வரி செலுத்தாமலிருப்பதை ஆதரிக்காத போதே கட்டுப்பாடுகளை நீக்குவது.

இ. பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளை ஆதரிக்கும் போதே உள்ளூர்க் கைத்தொழிலை பாதுகாப்பது.

ஈ. பொருளாதார நடவடிக்கைகளுக்கான ஊக்குவிப்புக் கட்டமைப்பிற்கு வலுவூட்டும் போது அரசாங்க வருமானத்தை பாதுகாப்பது.

(2) மேலே தரப்பட்டுள்ள உரைப்பகுதியில் உள்ளூர்க் கைத்தொழில்களுக்கு பாதுகாப்பு அளித்தற்காக குறிப்பிடப்பட்டுள்ள மாற்று முறைகள் இரண்டு யாவை?

(3) இறக்குமதி(சுங்க)த் தீர்வைத் திட்டமொன்றில் விரும்பத்தக்க அம்சம் எது வாக இருக்கும்?

(4) ஜனாதிபதித் தீர்வை ஆணைக்குழுவின் விசாரணை அலுவல் நியதிகளை சுருக்க மாகக் கூறுக.

(5) ஏற்றுமதி வரிகள் " மோசமான வரிவிதிப்பு முறையொன்று" என குறிப்பிடப் படுவதற்குக் காரணமென்ன?

(6) (அ) பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள்.

(ஆ) ஏற்றுமதிக்குரிய தொகையான தேயிலை.

ஆகியன மீதான வரிவிதிப்புப் பற்றி நிதி அமைச்சரின் முன்மொழிவுகள் யாவை?

(7) தேயிலை மீது விதிக்கப்பட்டுள்ள இருவகையான வரிகளுக்கிடையிலான வேறு பாட்டை உமது சொந்தச் சொற்களைக் கொண்டு விளக்குக.

****** ************

விரசிப்புத் திறன்
விடைகள்

மாதிரி வினாத்தாள் :-01

வினா- (1)

(அ)-(1) ஒரு வாக்கியம்:

" பாரம்பரியமற்ற குடிசைக் கைத்தொழில் உற்பத்தியினால் மட்டும் பொருளாதார அபிவிருத்தியை அடைந்துவிட முடியாது.

(அ)-(2) விளக்கம்:

கலாச்சார உருவங்கள்:

ஒரு சமூகத்தின் கலாச்சார அம்சத்தினை அன்றாட உடைகள், பாவனை முறைகள் மூலமும், அச்சமூகத்தைச் சேர்ந்த கருத்தாக்கங்களினால் ஆக்கப்படும் இசை, சிற்பம், நடனம், நாடகம், ஓவியம் போன்ற நுண் கலைகள் மூலமும் அறிந்து கொள்ள முடியும். இவ்வடிப்படையில் நோக்கும் போது முன்னரெல்லாம் அன்றாடப் பயன்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட குடிசைக்கைத்தொழில் உற்பத்தியில்

பொருள்கள் யாவும் சிற்பம், ஓவியம் கலந்த உற்பத்திப் பொருள்களாகவே இருந்தால் அவையாவும் கலாச்சார உருவங்களைப் பிரதி பலிப்பனவாக இருந்தன. ஆனால், நற்போதைய குடிசனப் பெருக்கம் காரணமாக இந்நிலை மாறி வேகம் குறைந்த குடிசைக் கைத்தொழில் உற்பத்திகள் வளரும் பொருளாதார அபிவிருத்திக்கு அளித்துவரும் பங்களிப்பு குறையத் தொடங்கியுள்ளது எனலாம்.

(ஆ)- (1) ஒரு வாக்கியம்:

" ஊழியர்கள் கம்பனிப் பங்குகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் தமது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ள முடியும்".

(ஆ)- (2) விளக்கம்:

வாழ்நாள் சேமிப்புக்களை முதலீடு செய்தல்:

ஒருவர் தனது ஆயுட்காலத்தில் கிடைக்கும் வருமானத்தில் இருந்து பிற்காலத் தேவைக்காகச் செய்யும் சேமித்தலை வாழ்நாள் சேமிப்பு எனப்படும். முன்னரெல்லாம் ஊழியர்கள் தம் உழைப்பில் போதிய அளவிலான சேமிப்புச் செய்து கொள்ள முடியவில்லை. அதனால் அவர்களின் சமூக வாழ்க்கைத்தரம் கீழ் மட்ட நிலையிலேயே இருந்தது. இன்று அவர்கள் தமது வாழ்நாள் சேமிப்புப் பணத்தினை அதிகளவில் கம்பனிப் பங்குகளைக் கொள்வனவு செய்வதில் செலவிடுகின்றனர். அதிலிருந்து கிடைக்கும் இலாப வருமானத்தைக் கொண்டு தமது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ள முடிகின்றது.

(இ)- (1) ஒரு வாக்கியம்:

" வரையறுக்கப்பட்ட வளங்கள் அவை ஒழிந்து போகாதவாறு பேணிப்பாதுகாக்கப்படல் வேண்டும்".

(இ)-(1) விளக்கம்:

வரையறுக்கப்பட்ட அளவிலேயே

புவியில் இயற்கையாகக் காணப்படும் சகல வளங்களும் மானிடர் போல் பல்கிப் பெருகாமல் ஆதிகாலம் முதல் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அமைந்து காணப்படுகின்றன. பெருகும் சனத்தொகைக் கேற்ப, தேவைக்கு மிதமிஞ்சியதாக அவற்றைப் பயன்படுத்தினால் அவை அழிந்தொழிந்து போய்விடும். இதனால் ( . . அத்தியாவசியமான அரிய வளங்கள் கூட முடிவுற்று விடலாம். எனவே, அவ்வளங்களை அவசியமெனக்கருதப்படும் தேவைகளுக்கு ஏற்ப மட்டும், வரையறுக்கப்பட்ட அளவிலே பாதித்தல் நாம் கருத்திற் கொள்ளத்தக்க ஒன்றாகும்.

வினா : 02

தலைப்பு : " தேசிய இயக்கங்கள் "

சுருக்கம் :

| | | | |
|---|---|---|---|
| ஆசிய | நாடுகளின் | பொருளாதார | அபிவிருத்தி |
| அரசியல் | நிலைமைகளை | அங்கு | காணப்படும் |
| குடியேற்றவாத | நடவடிக்கைகளும் | தேசிய | இயக்கங்களும் |
| எடுத்துக் | காட்டுகின்றன. | நாட்டின் | கலாச்சாரம் |
| சமயம் | மொழி | போன்றவற்றை | அந்நியர் |
| செல்வாக்கிலிருந்து | பாதுகாப்பதற்காகவும் | அடிமைத்தளையில்- | இருந்து |
| சுதந்திரம் | பெற்றுக் | கொள்வதற்காகவும் | தேசிய |
| இயக்கங்கள் | உருவாகின்றன. | இக்காரணிகளும் | மேற்கிலும் |
| கிழக்கிலிருந்து | பெறப்பட்ட | தேசியவாத | அபிவிருத்திப் |
| போக்கு | உள்நாட்டு | விடுதலைத் | தலைவர்களின் |
| சிந்தனைகளும் | இயக்கங்கள் | தோன்றக் | காரணமாயின. |
| இவ்வியக்கங்கள் | காரணமாக | இந்நாடுகள் | சுயமாக |
| இயங்கி | அபிவிருத்தி | அடைகின்றன. | தேசிய |
| இயக்கங்கள் | தோன்றாத | ஆபிரிக்காவின் | பல |
| நாடுகளில் | இன்றும்கூட | வல்லரசுகளின் | உதவி |
| வழங்கல் | திட்டத்தினால் | அடிமைப் | படுத்தப்பட்டிருப்பதால் |
| அந்நாடுகளில் | ஏகாதிபத்தியத் | திரிப்பு | பிரயோகிக்கப்பட்டு |
| பொருளாதாரச் | சூறையாடல் | நடைபெற்று | வருகின்றன. |

(72 சொற்கள்)

வினா : 03

(1) - (ஆ)  (11) - (அ)

(111) - (இ)  ( 1V ) - (ஆ)

மாதிரி வினாத்தாள் : 02

வினா இல (1)

(அ)-(1) " நடத்தைக் கோலம் "

காலக்காலமாகக் கடைப்பிடித்து வரும் ஓர் ஒழுங்கமைப்புப் பெற்ற வழக்கமான நடைமுறை நடைத்தைக்கோலம் எனப்படும். இந்நடத்தைக் கோலம் ஒரு சமூகத்தின் பண்பாட்டை பிரதிபலித்துக் காட்டுவதர் .ககருதப்படுகிறது.

(அ) - (2) "வழமையை மீறுதல்"

பண்டுதொட்டு மரபு ரீதியாக இருந்து வந்த ஒரு சமூக பண்பாட்டு வழக்கங்களைக் கைவிட்டோ அல்லது மாற்றி அமைத்து பிறழ்ந்து நடத்தல் வழமையை மீறுதல் எனக் கருதப்படும்.

(ஆ) வழமை என்றால், தமது முன்னோர் தலை முறை - தலை முறையாக கைக்கொண்டு - கடைப்பிடித்தொழுகி மீண்டும் மீண்டும் செய்து வந்த ஒரு வழக்க முறையாகும்.

(இ) "கணவன்-மனைவி, ஆண்-பெண் நடந்து செல்லும் போது இந்திய வழக்கம் கணவனும் மனைவியும் வாழ்க்கை என்னும் ஓடத்தில் இரு சம மான அங்கங்களாக இருந்த போதும் ஆணைக் கௌரவப்படுத்துவதற்காக ஆண் முன் செல்ல பெண் பின்னால் செல்வாள். இவ்வழக்கம் ஆங்கிலேய தேநீர் தயாரிக்கும் முறையான தேயிலையை நீரில் கொதிக்க வைத்த பின்னர் பாலுடன் கலப்பதற்கு ஒப்பானதாகும். இதற்குமாறாக ஆங்கிலேயர் கணவன் மனைவி இருவரும் சமமானவர்களே என்பதை எடுத்துக் காட்டுமுகமாக இணையாகவே நடந்து செல்வர். இவ்வழக்கம் இந்திய தேநீர் தயாரிக்கும் முறையான தேயிலை, நீர், பால் மூன்றினையும் ஒன்றாகச் சேர்த்து கொதிக்க வைப்பதற்கு ஒப்பானதாகும். இங்கு நீரில் கொதிக்க வைத்தல் எனும் செயல்முறை, நடத்தல் எனும் செயற்பாட்டுக்கு ஒப்பானதாகும்.

(ஈ) இல்லை.
ஒரு செயலைச் செய்யும் போது அது சரியானது தான், பொருத்த மானது தான் என சமூகம் கருதும் பட்சத்தில் மீண்டும் மீண்டும் நடை முறையில் கைக்கொள்ளும் போது அச்செயல் வழக்கமாகி விடுகின்றது.

மாதிரி வினாத்தாள் - 03

(அ) இல்லை.

(ஆ) ஆசிரியர் - மாணாக்கர் தொடர்பின் தன்மை பற்றி கட்டுரையாசிரியர் கூறும் போது

(1) ஆசிரியர் மாணாக்கர்களை தமது மகன்களாக நோக்கிய அதே வேளை மாணாக்கர்கள் ஆசிரியர் மீது பெற்றோருக்குக் கொடுக்கும் அதே மதிப்பைக் கொடுத்து பேணி வந்தனர் என்றும்,

(2) மாணவர்களின் குணநலன்களை உருவாக்குவதில் ஆசிரியரின் ஆளுமை காரணமாக இருந்தது என்றும்,

(3) இதனால் ஆசிரியர்களுக்கு மாணாக்கர் தமது சொந்த விருப்பத்தின் பேரில் அன்பளிப்புக்களை வழங்கி வந்தனர் என்றும் எடுத்துக் கூறுகிறார்.

(இ) (1) மாணவர்களுக்கு பாடங்களைக் கற்பித்தலில் கஞ்சத்தனம்-குருமுஉஷ்டி செய்த ஆசிரியர்களும்,

(2) கூலிக்கு மட்டும் கற்பித்த ஆசிரியர்களும் சமூகத்தினால் இகழப்பட்டார் கள்.

(ஈ) அக்கால மரபு வழியான - திண்ணைக் கல்வி முறைக்கு ஆசிரியர் மிக அவசியமானவராகக் காணப்பட்டார். எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்பதற்கொப்ப அவ்வாசிரியர் மக்கள் யாவரதும் உயர் மதிப்பினைப் பெற்றிருந்தார்.

(உ) ஆசிரியர் மாணாக்கர் தொடர்பில்,

(1) அறிவைக் கிரகிக்கும் திறன்கொண்ட மாணவர்களுக்கு ஆசிரியர் தான் பெற்றிருந்த அறிவு முழுவதையும், கஞ்சத்தனம் காட்டாது மறைத்தலின்றி வழங்குதல்.

(2) மாணவர் மிடத்தில் நல்ல குணவியல்புகளை உருவாக்கத்தக்க கல்வியை ஊட்டல் போன்றவை, ஆசிரியர் ஒருவரின் மிகச் சிறந்த கடமைகளாக இருந்தன.

<u>மாதிரி வினாத்தாள் : 04</u>

(1)-(ஆ) வரி செலுத்தாமலிருப்பதை ஆதரிக்காத போதே கட்டுப் பாடுகளை நீக்குவது,

(2)

அ. பொதுவாக உள்ளூர் கைத்தொழில் பொருள்களுக்கு சீரமைக்கப் பட்ட படிப்படியாகக் குறையத்தக்க வகையிலான ஏற்றுமதித் தீர்வைகளை விதித்தல்.

ஆ. விவசாயம் சார்ந்த, கடற்றொழில் சார்ந்த கைத்தொழில் பொருள்களுக்கு முற்றாக ஏற்றுமதித் தீர்வையை நீக்கி விடுதல்.

(3) இறக்குமதிக்கட்டுப்பாடு, கோட்டா முறை என்பனவற்றை நீக்கி உள்ளூர் கேள்வி நிரம்பல் நிலைமைகளுக்கேற்ப வளங்களை ஒதுக்கீடு செய்து கொள்ளலாகும்.

(4) ஜனாதிபதித் தீர்வை ஆணைக்குழுவின் விசாரணை அலுவல் நியதிகளை பின் வருமாறு கூறலாம்.

1. முன்னர் நடைமுறையிலிருந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள், கோட்டா முறைகளில் உள்ள நடைமுறைப் பிரச்சனைகளை உள்நாட்டு உற்பத்தி யுடன் ஒவ்வாத அம்சங்களை இனங்காணல்.

2. இனங்காணப்பட்ட பிரச்சனைகள், ஒவ்வாதவற்றை நீக்கத்தக்க வகையில் சிறந்த- சீரான சுங்கத்தீர்வை முறைகளைத் திட்டமிடல் அவ்வாறு திட்டமிடும் போது உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு தேவையான வரிப்பாதுகாப்பு அம்சங்களை எல்லாக் கோணங்களி லிருந்தும் ஆராய்ந்து முடிவெடுத்தல்.

3. அவ்வாறு ஆராய்ந்து முடிவெடுக்கப்பட்டவற்றை உள்நாட்டு கைத் தொழில் உற்பத்தியின் தன்மை அவற்றின் கேள்வி நிரம்பல் தன்மை, அளவுகள் என்பவற்றை ஆழ்ந்த முறையில் கணித்து தீர்வை அளவுகளை வடிவமைத்தல்.

4. சிறந்த முறையில் மாற்றியமைக்கப்பட்ட சுங்கத் தீர்வை அளவு கோல்களை செயற்படுத்தத்தக்க வகையில் அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்தல்.

5. பாரம்பரிய பொருள்களான தேயிலை, இறப்பர், தெங்குப்பொருள்கள், என்பன வற்றிற்கு ஏலவிற்பனை வரியை விட நிலையான ஏற்றுமதி வரியும் விதிக்கப்படுகின்றது. இவ்விரட்டை வரி முறைகளில், ஏற்றுமதி வரி பொருளின் விலையின் அடிப்படையி லல்லாது தீர்வை வரியாக அறவிடப்படுவதால், உற்பத்தியாளர் உற்பத்திச் செலவிலும் குறைந்த வருமானத்தைப் பெறுகின்றனர். இதனால் அவர்கள் பெரும் நட்டத்திற்கும் முதல் இழப்பிற்கும் உட்படுகின்றனர். இக்காரணத்தினால் இவ் வேற்றுமதி வரி ஒரு மோசமான வரி முறை என குறிப்பிடப்படுகின்றது.

6. ( ) பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருள்களுக்கு அவற்றிற்கிடையே பொருந்தக் கூடிய சமமான ஏற்றுமதித் தீர்வை வகைளை ஏற்படுத்தல், அப்பொருள்களுக்கு சந்தை விலைக்கேற்ப பொருந்தக் கூடிய நியாயமான நிலையான ஏற்று மதி வரிகளை ஏற்படுத்தல், போன்றவற்றை நிதியமைச்சர் முன்மொழிந்தார்.

அதே போல், ஏற்றுமதிக்குரிய தொகையான தேயிலைக்கு ஒரு கிலோ கிராமுக்கிருந்த நிலையான வரி ரு 5/- ஐ 3,50 சதமாகவும், பைக்குள் அடக்கப்பட்ட தேயிலைக்கு ரு 3,50 சதத்திலிருந்து ரு 2/- ஆகவும் விலைக்குறைப்புச் செய்ததோடு ஏற்றுமதிக்கான மொத்தத் தேயிலையில் ஒரு கிலோ கிராமுக்கு 50% வரி தொடர்ந்தும் இருக்கும் எனவும் முன் மொழிந்தார்.

7. பாரம்பரிய தேயிலை, இறப்பர், தெங்குப் பொருள்களுக்கு வரி அறவீட்டில் இரு முறைகள் கைக்கொள்ளப்பட்டன. ஒன்று ஏல விற்பனையின் போது அறவிடப்படும் விற்பனை வரி மற்றயது ஏற்றுமதி செய்யும் தறுவாயில் அறவிடப்படும் நிலையான தீர்வை வரியாகும். ஏலவிற்பனை வரி வெந்தேசி விலைக்கேற்ப அறவிடப்படும். வெளிநாட்டுச் சந்தை விலை ஏற்ற இறக்கத்திற்கேற்ப வரியும் கூடிக்குறையும். இதனால் உற்பத்தியாளர் பாதிக்கப்படுவதில்லை. ஆனால், நிலையான வரிமுறை இதிலிருந்து வேறுபடுகின்றது. அதாவது, பொருளை ஏற்றுமதி செய்யும் தறுவாயில் அறவிடப்படும் வரி நிலையான சுங்க வரி எனப்படும். இவ்வரியினால் ஏற்படும்செலவு உற்பத்திச் செலைவ பெருமளவு பாதிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. எனவே, இத்தகைய வரி முறையினால் உற்பத்தி யாளர் பெரும் பாதிப்பிற்குட்பட்டு நட்டமடைகின்றனர். இதனால், உற்பத்தி யில் ஊக்கம் பின்தள்ளப்படுகிறது எனலாம்.

o(o)o

## சுருக்கமெழுதல்.

1. பொது:

கிரகிப்புத் திறனில் சுருக்கக் கிரகித்தல் முக்கியமானதொன்றாகும். விரிவான, விளக்கமாக உள்ள வாசகப்பகுதிகள், கதைகள், பேச்சுக்கள், உரையாடல் போன்றவற்றிலுள்ள தேவையற்றவை நீக்கப்பட்டதும் மிக முக்கிய மானதுமான கருத்துக்களைக் கொண்டதாக அமையும் ஒரு சாராம்சமே சுருக்கம் எனப்படும்.

நாம், நாள்தோறும் பல சந்தர்ப்பங்களிலே செய்திகள், கதைகள், பேச்சுக்கள்; உரையாடல்கள் போன்றவற்றின் பிரதான கருத்துக்களை மட்டுமே மனதில் கிரகித்து, எமது மொழி நடையில் சுருக்கமாக மற்றவரிடம் கூறுகின் றோம். பின்னொரு பொழுது செய்திகள், கதைகள் என்பவற்றை, ஞாபகப்படுத்தி மீட்கும் போதோ , அல்லது வாசித்த விடயங்கள் எல்லா வற்றையும் ஞாபகத்தில் கொண்டிருப்பதில்லை. அவற்றில் முக்கியமானவைகள் மட்டுமே எமது ஞாபகத்தில் இருக்கும். முக்கியமான கருத்துக்களைக் கிர கித்துக் கொள்ளும் தன்மையிலேயே ஞாபக சக்தி ஏற்படுகின்றது. இவ்வாறு ஞாபகமுள்ள முக்கியமான கருத்துக்கள் அமைந்து விடுவதை அதன் சுருக்கமெனலாம்.

2. சுருக்கத்தின் இலட்சணங்கள்:

சுருக்கமொன்றின் பிரதான இலட்சணங்கள் மூன்று ஆகும். அவையாவன,

(1) பந்தியின் முக்கியமான பொருள் செறிந்த கருத்துக்களை முன்பின் முரணாகாத வகையில் ஒழுங்குபடுத்திச் சுருக்கமாகக் கூறல்.

(2) உண்மைக் கருத்துக்களைக் குறைத்தோ அல்லது புதிய கருத்துக் களைப் புகுத்தியோ எழுதாது பந்தியில் தரப்பட்டவற்றின் முக்கிய கருத்துக்களை மட்டும் எழுதல்.

(3) சுருக்கமெழுதும் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.

3. சுருக்கமெழுதும் படிமுறை:

சுருக்கமெழுதல் பற்றி எமக்குத் தெரிந்த போதும் நேர்த்தியான சுருக்கமொன்றினை எழுதிவிடலாம் எனக் கூறி விட முடியாது. சுருக்கமெழுதுதல் கொடுக்கப்பட்ட உரைப்பகுதியை கிரகிக்கும் ஆற்றலியேயே தங்கியுள்ளது. அத்துடன் சுருக்கம் ஒன்றினை எழுதும் போது பின்வருமாறு கிரம முறைகளைக் கைக்கொள்ளின் சரியான சுருக்கமொன்றினை எழுதிக் கொள்ள முடியும்.

3:1 வாசித்தலும் கிரகித்தலும்,
3:2 தலைமைக்கருத்தினையும் (பிரதான கருத்து), சார்புக் கருத்துக்களையும் குறித்துக் கொள்ளல்.
3:3 தெரிவு செய்யப்பட்ட கருத்துக்களை ஆராய்தல்.
3:4 கருத்துக்களை ஒழுங்குபடுத்தலும் நிரல் படத்தொகுத்து சுருக்கி எழுதுதலும்.
3:5 ஒப்பிடல்
3:6 இரண்டாம் சுருக்கப் பந்தியைத் தயாரித்தல்.
3:7 சொல் எண்ணிக்கையைக் கணித்தல்.
3:8 [illegible]

3:1 வாசித்தலும் கிரகித்தலும்:

சுருக்கமெழுதுவதற்கு முதற்படி கிரகித்தலேயாகும். எந்தவொரு உரைப்பகுதியையும் முதல் வாசிப்பிலேயே விளங்கிக் கொள்ளல் கடினமானவொன்றாகும். ஒரு பந்தியை அல்லது ஒரு வாசகப்பகுதியை கிரகித்துக் கொள்வதற்கு பின்வரும் அம்சங்கள் அவசியமாகும்.

3:1:1 தரப்பட்ட உரைப்பகுதியை மனதில் நன்கு பதியும்படி பரபரப்பின்றி அவசரப்படாது அவதானத்தை நிலை நிறுத்தி வாசித்தல் வேண்டும்.

3:1:2 ஒரு முறை வாசித்து விளங்கிக் கொள்ள முடியாது யோயின் விளங்கிக் கொள்ளும் வரை மீண்டும் மீண்டும் இரண்டு மூன்று முறையாவது வாசித்தல் வேண்டும்.

3:1:3 பந்தியில் தரப்பட்ட பகுதிகள் விளங்காது இருப்பின் அப்பகுதிகளை வாக்கியம் வாக்கியமாகப் படித்து விளங்கிக் கொள்ள வேண்டும்.

3:1:4 மயக்கமாக அல்லது விளங்கிக் கொள்ள முடியாது போகும் சொற்களையும், சொற்றொடர்களையும் தெளிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

3:1:5 வாசிக்கும் பகுதி இன்னது பற்றியது என அறிந்து கொள்ளல் வேண்டும்.

3:1:6 வாசிக்கும் பகுதியில் எழுதியவரின் நோக்கம் என்ன என்பதை, அவர் கருவாக எடுத்துக்கொண்ட பொருள் என்ன என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

3:1:7 எழுதியவர் எடுத்துக் கொண்ட பிரதான கருத்தையும், அதற்கான சார்புக்க கருத்துக்களையும் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

3:2 தலைமைக்கருத்துக்களையும் சார்புக்கருத்துக்களையும் குறித்துக் கொள்ளல்.

3:2:1 கொடுக்கப்பட்ட உரைப்பகுதியை வாசித்து அதிலுள்ள முக்கியமான கருத்துக்களைக் குறித்துக் கொள்ளல் வேண்டும். முதலாவது வாசிப்பிலேயே அவ்வுரைப்பகுதியில் காணப்படும் பிரதான விடயம் என்ன என்பதைக் குறித்துக் கொள்வது நன்று. உரைப்பகுதியை எழுதியவ தான்சொல்ல எடுத்துக் கொண்ட மிக முக்கியமான விடயமே பிரதான கருத்தாக கருப்பொருளாக அமைந்து காணப்படும். இதனைத் தலைப்பாக எழுதிக் கொள்ளல்வேண்டும். இப்பிரதான கருத்தே சுருக்கமெழுதியபின் அவ்வுரைப்பகுதிக்கு தலையங்கமாக விடுவதற்கு உதவியாகவமையும்.

3:2:2 இரண்டாம் முறை வாசிக்கும்போது கொடுக்கப்பட்ட உரைப்பகுதி பல பந்திகளைக் கொண்டதாகவோ அல்லது ஒரு தனிப்

பந்தியாகவோ அமைந்திருக்கலாம். தனிப்பந்தியாக அமைந்திருப்பின் அதனைக் கருத்துத் தொடர்புகளுக்கேற்ப மூன்று நான்கு பிரிவாகப் பிரித்து எழுதியவரின் கருத்து எவ்வாறு வளர்ச்சியடைகின்றது என்பதை அறிந்து கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு பந்தியிலும் அல்லது நாம் பிரித்துக் கொண்ட பந்திகளில் உள்ள முக்கிய கருத்துக்களை அவ்வப்பகுதிகளுக்குப் பதிலாக குறித்துக் கொள்ளல் வேண்டும். இவையே உப தலைப்புகள், அல்லது சார்புக்கருத்துக்கள் எனப்படும்.

3:3: தெரிவு செய்யப்பட்ட கருத்துக்களை ஆராய்தல்:

3:3:1 மூன்றாம் வாசிப்பின் போது தலைமைக்கருத்துக்கும் சார்புக் கருத்துக்கும் அவசியமான அம்சங்களை உரைப்பகுதியில் இருந்து ஆராய்ந்து தேர்ந்தெடுத்து அவற்றுடன் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

3:3:2 தலைமை சார்புக்கருத்துக்களுக்குத் தேவையான அம்சங்களை தேர்ந்தெடுக்கும் போது அவசியமற்ற தேவையற்ற விடயங்களைக் கைவிடலாம். எடுத்துக் காட்டாக,

(அ) உதாரணங்கள் எடுத்துக் காட்டுக்களைத் தவிர்த்தல்,
(ஆ) வர்ணனைகளை நீக்குதல்.
(இ) உவமை உவமானங்களைத் தவிர்த்தல்,
(ஈ) கூறிய கருத்துக்களை மீண்டும் கூறாது தவிர்த்தல்,
(உ) ஒப்புமை, வேற்றுமை காட்டிக் கூறப்படும் கருத்துக்களில் வேற்றுமைக் கருத்துக்களைத் தவிர்த்தல்.
(ஊ) வாசகப் பகுதியில் உள்ள கருத்தோடு சம்பந்தமில்லாத புறம்பான விடயங்களைத் தவிர்த்தல்.

3:3:3 தலைமை, சார்புக் கருத்துக்களுக்கு அவசியமான அக்கருத்துக்கு வலுவளிக்கும் அம்சங்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அப்போது பின்வருவனவற்றை கவனத்திற் கொண்டு விடயங்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(அ) விரிவான முறையிலுள்ள விடயங்கள் பற்றிய விளக்கங்களை
* சுருக்கி எழுதுதல்.
(இ) நேர்பொருளை விடுத்து குறிப்புப் பொருளில் எழுதுதல்.
(ஈ) தன்கூற்றுப் பகுதிகளை பிறர் கூற்றுக்களாக்கி எழுதுதல்.
(உ) வினா வாக்கியங்களை கூற்று வாக்கியங்களாக அமைத்து எழுதுதல்.
(ஊ) நீண்ட வாக்கியங்களுக்குப் பதிலாக ஒவ்வொரு சொல் வாக்கியங்களில் எழுதுதல்.

சிறந்தவொரு சுருக்கத்தினை எழுதிக் கொள்வதற்கு சுருக்கம் எழுதுவதற்குப் பயன்படுத்தும் நேரத்தில் மூன்றிலொரு பகுதியை இத்தகைய பூர்வாங்க வேலைகளில் செலவு செய்தல் பயன் பயப்பதாகும்.

* (ஆ) எதிர்மறையாகக் கூறப்படும் கருத்துக்களை நேர் கருத்துகளாகக் கொண்டு எழுதுதல்.

3:4 ஒழுங்குபடுத்தலும், நிரல்படத் தொகுத்து சுருக்கி எழுதலும்.

3:4:1 குறிப்புகளிலுள்ள கருத்துக்களை அவற்றின் தொடர்புகளுக்கேற்பவும், காரண காரிய முறைகளுக்கேற்பவும் ஒழுங்குபடுத்தி நிரல்படக் கோர்த்தல் வேண்டும். குறிப்புகளைக் கொண்டு பொருள் செறிவுள்ள சுருக்கத்தை எழுதிக் கொள்வதற்கும் இவ்வொழுங்குபடுத்தல் அவசியமாகிறது. ஏனெனில் சிலவேளைகளில் நாம் பெற்றுக் கொண்ட கருத்துக்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றதாகி அமைந்து விடலாம். மேலும் இவ்வாறு ஒழுங்கான சட்டமும் அமைக்கப்படாது விட்டால் சில சமயம் கருத்துக்கள் மிகைப்பட்டும், அல்லது மிகச் சுருக்கமாயும் அமைந்து விடலாம்.

3:4:2 மேற்படி கருத்துக்களை செவ்வனே கோவை செய்து கொண்டு சுருக்கத்தின் மூலப்பிரதியை நகல் பிரதியை எழுதிக் கொள்ளல் வேண்டும்.

3:5 ஒப்பிடல்.

சுருக்க நூலை அமைத்துக் கொண்ட பின்பு அது கருத்துத் தொடர்புற அமைந்துள்ளதாவென விளாப்பத்திரத்திலுள்ள மூல உரைப்பகுதியுடன் ஒப்பிட்டாராய்தல் வேண்டும். இவ்வாறு ஒப்பிட்டாராயும் போது முக்கியமான கருத்துக்கள் யாதாயினும் விடுபட்டுள்ளனவா என்பதை கருத்திற் கொள்ளல் வேண்டும். முக்கிய கருத்துக்கள் தவறிக் காணப்பட்டால் அவற்றைப் பொருத்தமான இடத்தில், பொருத்தமான முறையில் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். இவ்வொப்பீடு சரியெனின் சுருக்கம் பூரணமடைகின்றது.

3:6 இரண்டாம் சுருக்கப் பிரதியைத் தயாரித்தல்.

3:6:1 நகல் பிரதியிலுள்ள குறிப்புக்களைக் கொண்டு மூல உரைப்பகுதியினைப் பாராது கருத்தைத் திரட்டி பரும்படியான பொருட் சுருக்கத்தை எழுதல் வேண்டும். இவ்வாறு எழுதும் போது இயன்றவு நமது சொந்த உரை நடையிலேயே சுருக்கம் அமைதல் வேண்டும். ஆனால் நாம் எமது சொந்தக் கருத்துக்களைச் சுருக்கத்தில் சேர்த்துக் கொள்ளல் கூடாது. உரை ஆசிரியனின் கருத்தையே சுருக்கி எழுதல் வேண்டும். சிலவேளை மூல உரை நடையில் காணப்படும் சொற்களையும் சொற்றொடர்களையும் அப்படியே கருதி சுருக்கத்தில் சேர்த்துக் கொள்ளல் தவறாகாது.

3:6:2 சுருக்கத்தை ஒரு பந்தியிலேயே எழுதல் வேண்டும். தரப்பட்ட உரை நடையில் ஆசிரியனின் கருத்து திட்டவட்டமாக வேறுபாடு கொண்டு காணப்படின் மட்டுமே இன்னொரு புதிய பந்தியை ஆரம்பித்தல் வேண்டும்.

3:6:3 சுருக்கத்தில் நாம் கையாளும் உரை நடை இலக்கண அமைவுடையதாகவும் தெளிவற்றதாகவும் அமைதல் வேண்டும். தொடர்பற்றதாக சொற்றொடர்களை அமைத்து தந்திச் செய்தி கொடுப்பது போல் எழுதல் விளக்கமான சுருக்கமாகாது. மொத்தத்தில் மூல உரைப்பகுதியைப் போலவே சுருக்கமும் நல்ல உரை நடையில் அமைதல் அவசியமாகும்.

3:6:4 வாக்கியங்களை எழுதும் போது நீண்ட வாக்கியங்களாகவோ அல்லது குறுகிய வாக்கியங்களாகவோ அமையக் கூடாது. சுருக்கத்தை வாசிப்பவர்களுக்கு தெளிவாக விளங்கக் கூடியவிதத்தில் மத்திம நடை வாக்கியங்களாக அமைதல் வேண்டும்.

3:6:5 இரண்டாம் பிரதியினை எழுதும் போதே 3 அல்லது 4 நிரல்களில் மேலிருந்து கீழாக கோடுகள் வரைந்து அவற்றினுள் எழுதல் வேண்டும். இதன் மூலம் இரண்டாம் பிரதியிலேயே சொல் எண்ணிக்கையைக் கணித்துக் கொள்ள முடியும். இதனால் நேரமிச்சமும் ஏற்படும்.

3:7 சொல் எண்ணிக்கையைக் கணித்தல்:

3:7:1 இரண்டாம் சுருக்கப் பிரதி எழுதியபின் வினாவிற் கேட்கப் பட்ட சொல் எண்ணிக்கையைக் கணக்கிடுதல் மிக அவசியமாகும். சரியாக அமையும் சுருக்கம் ஒன்று கேட்கப்படும் சொல் எண் ணிக்கைக்குச் சரியாகவே அமையும். சுருக்கத்தில் சொற் களின் எண்ணிக்கை கேட்கப்பட்ட அளவுக்குக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ அமையக்கூடாது என்பதைக் கவனத் திற் கொள்க.

3:7:2 எழுபது சொற்களில் எழுதுக எனக் கேட்கப்படும் போது 60 சொற்களிலோ அல்லது 80 சொற்களிலோ எழுதலாம் என எதிர்பார்க்கவில்லை. எனவே, இதனைச் சரியாக விளங்கி, வினாவப்பட்ட சொல் எண்ணிக்கையிலேயே எழுதுதல் வேண்டும். அல்லது முடியாது போயின் 5% கூடலாம் அல்லது குறையலாம். உதாரணமாக 55 சொற்களில் சுருக்கமெழு தும்படி கேட்கப்படும் போது 57 சொற்களில் எழுதலாம். அல்லது 53 சொற்களில் எழுதலாம். இவ்வெல்லைக்கு மேற்படும் அல்லது குறையும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு புள்ளிகள் வீதம் குறைக்கப்படும் என்பதைக் கவ னத்திற் கொள்க.

3:7:3 சில வேளைகளில் இதனைச் சொற்களில் எழுதுக எனக் கேட்கப் படாமல் $1/3$ ஆகச் சுருக்கி எழுதுக என வினாவப்படும் போது, மூலப்பிரதியினை முழுமையாக அண்ணளவாக எண்ணிக் கணக்கிட்டு அதற்றில் $1/3$ பங்கு எண்ணிக்கைக்குச் சமமாக எழு துதல் வேண்டும்.

3:8 நியமமான சுருக்கத்தை எழுதுதல்:

3:8:1 இரண்டாம் பிரதி சுருக்கத்தை எழுதி சொல் எண்ணிக்கைகளைக் கணித்துக் கொண்டதும் உண்மைச் சுருக்கத்தை எழுதுதல் வேண்டும். இவ்வாறு எழுதிக் கொள்வதற்கு முன் விடைத்தாளில் இடமிருந்து வலமாக மேலிருந்து கீழாக வரிசையில் 3 அல்லது 4 நீள் சதுரங்கள் அமையத்தக்கவாறு கோடுகள் வரைந்து கொள்ளல் வேண்டும். (சில வேளைகளில் இதற்கென மேற்சொன்னவாறு கோடிடப்பட்ட விடைத்தாள்கள் வழங்கப்படலாம்.)

3:8:2 கோடிடப்பட்ட பகுதிக்கு மேற்பக்கமாக தவறாமல் சுருக்கத்திற்கான தலைப்பினை இட்டுக் கொள்க. கொடுக்கப்படும் தலைப்பு சுருக்கத்தின் கருத்திற்கு மிகப் பொருந்தக்கூடியதாக அமைதல் வேண்டும். இத்தலைப்பு சொல் எண்ணிக்கையுள் அடங்க மாட்டாது.

3:8:3 தலைப்பினை இட்டுக் கொண்டபின் சுருக்கத்தை எழுதுதல் வேண்டும். முதலாவது நீள் சதுரத்தின் இருந்தே எழுத ஆரம்பித்தல் வேண்டும். எழுதும் போது ஏலவே சொல்லப்பட்ட வாறு இடைச்சொற்கள், உரிச்சொற்கள், வினை வி ்கள் தொகைச் சொற்கள் என்பனவற்றை அவை இணைந்து வரவேண்டிய முறையில் அமையத்தக்கதாக ஒவ்வொரு கட்டிடனும் ஒவ்வொரு சொல்லைக் கொண்டெழுதிச் செல்லல் வேண்டும். அப்போது தான் சொற்களின் எண்ணிக்கை சரியாக அமையும்.

3:8:4 எழுத்துக்கள் உறுப்பு அமையத்தக்கதாக அழகாக எழுதப்படுதல் வரையறையான புள்ளிகளை ஈட்டித்தருமாகையினால் அதுபற்றி கருத்திற் கொள்ளல் மிக அவசியமாகும்.

3:8:5 எழுதப்படும் சொற்கள் நீளமான சொற்களாயின் இரு நீள் சதுரங்களுக்குள்ளே தொடர்ச்சியாக எழுதலாம். இவ்வாறு எழுதப்பட்டவற்றைக் கணக்கிடும் போது அவதானத்திற் கொள்ளல் வேண்டும். ஒரு நீள் சதுரத்திற்குள் ஒன்று அல்லது இரண்டு எழுத்துக்கள் எழுத முடியாமல் வந்தால் அதனை " காகக் . கால் ⅄ " இட்டு அச்சொல் முடிவிடத்தின் மேலே எழுதுதல் வேண்டும்.

3:8:6 சுருக்கம் எழுதப்பட்டு முடிவுற்ற பின் சுருக்கத்தின் அடியில் சொல் எண்ணிக்கையை " இத்தனை சொற்கள் " என இட்டுக் கொள்ளல் சிறப்பாகும்.

4. <u>சுருக்கமெழுதுதலும் நேரக்கணிப்பும்:</u>

4:1 பொதுவாக 70 முதல் 80 வரையான சொல் எண்ணிக்கையில் சுருக்கமெழுதும்படியே வினாவப்படும். இச்சொல் எண்ணிக்கையில் சுருக்கமொன்றினை எழுதிக் கொள்வதற்கு சராசரி 45 நிமிடங்கள் தேவையாகும்.

4:2 சுருக்கமெழுதுவதற்கென எம்மால் குறித்தொதுக்கும் நேரம் 45 நிமிடத்தினையும் பாகுபடுத்திக் கொண்டால் குறித்த நேரத்தள் சுருக்கத்தை எழுதி முடிப்பதற்கு உதவியாக அமையும்.

| | செயற்பாடு | செலவிடும் நேரம் நிமிடத்தில் |
|---|---|---|
| (அ) | வாசித்த கிரகித்த தலைமை சார்புக் கருத்துக்களைக் குறித்துக் கொள்ளல் | 25 |
| (ஆ) | மூலப்பிரதி (நகல் பிரதி) யைத்தயாரித்தல் | 8 |
| (இ) | இரண்டாம் பிரதியைத்தயாரித்தலும் சொல் எண்ணிக்கையைக் கணித்தலும். | 7 |